# வையாளி



உயர்தர மாணவர் ஒன்றியம்


தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின்

பிரிவுபசார மலர் 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் 40வது ஆண்டுவிழா












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்
தி/விவேகானந்தாக் கல்லூரி
திருக்கோணமலை.

மகுடவாசகம்

# கல்வி, ஒழுக்கம், தூய்மை

**MOTTO**

**EDUCATION DISCIPLINE PURITY**

நோக்கு

அறிவுமிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரஜைகள்

**VISION**

**COMPETENT CITIZENS WHO COPE WITH THE ERUDITE WORLD**

பணி

களத்தில் நடப்பது கடந்தகால நிகழ்கால அனுபவங்களுடன் வருங்காலத்தின் சவால்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட கற்றற் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும் திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக்கொடுத்தல்.

**MISSION**

**TO CREATE KNOWLEDGEABLE, SKILLFUL, DISCIPLINED AND HONEST STUDENTS BY PROVIDING AMELIORATED LEARNING OPPORTUNITIES THROUGH AN ANALYSIS OF THE EXPERIENCES OF THE PAST PRESENT AND THE CHALLENGES OF THE FUTURE.**

நூலகம்
தி/விவேகானந்தாக் கல்லூரி
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

உவர்மலை கல்லூரி விவேகானந்தா வாழ்க
ஊதா வெள்ளைக் கொடி நிமிர்ந்தாட
உவர்மலை மக்கள் உவர்ந்தளித்தனராம்
உயரிய செயலால் உளம் நிறைந்தனராம்!

ஒளியருள் கோணேசர் மலைமுடியில் - எங்கள்
எழில் தவழ் உவர்மலை கலை வடிவில்
கிளி மொழி தமிழ் எங்கும் வழிந்தோட – அதன்
கிருபையில் நாட்களும் கழிந்தோட!

கங்கா ஜமுனா காவேரி சிந்து
கற்பவரிடையே படை நான்கும்
எங்கள் திறமைகள் துலங்கிடுமே – அதன்
இனிமையில் பணிகளைத் தொடங்குவோமே!

உலகின் சிகரம் கல்வியென்போம் - அதன்
உண்மையை உணர்வோம் உயர்வடைவோம்
கலைகள் பலவும் வளர்த்திடுவோம் - என்றும்
கற்றதை மற்றரவர்க் குணர்த்திடுவோம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL DETAILS

NAME OF SCHOOL – **T/ORR'S HILL VIVEKANANDA COLLEGE**

ADDRESS – **CENTRAL ROAD, ORR'S HILL, TRINCOMALEE**

TYPE OF SCHOOL – **IAB**

SCHOOL WAS STARTED ON – **10.02.1978**

SCHOOL ID NO – **1701008**

SCHOOL CENSUS NO – **16058**

EXAMINATION NO – **29124**

PROVINCE – **EASTERN**

DISTRICT – **TRINCOMALEE**

DIVISION – **TRINCOMALEE**

ZONE – **TRINCOMALEE**

DIVISIONAL SECRETARIAT – **TOWN & GRAVETS, TRINCOMALEE**

ELECTION NO – **14 TRINCOMALEE**

SCHOOL PHONE NO – **026 222 2761**

SDS NO – **0002366381**

FACILITIES FEES NO – **0002366019**

TEACHERS SALARY NO – **0002366154**

QUALITY INPUT NO – **0002366944**

POSTAL NO – **31000**

GRAMA SEVAKA DIV NO – **244/P**

நூலகம்
திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடங்கள்


பாடசாலை மகுட வாசகம்

பாடசாலை கீதம்

பாடசாலை விடயம்

பொருளடக்கம் (சுவடுகள்)

- வலயக்கல்வி பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி ...
- அதிபரின் வாழ்த்துச் செய்தி ...
- இதழ் ஆசிரியரின் இதயத்திலிருந்து ...
- எமது பாடசாலையின் வெற்றிக்க வழிசமைத்த அதிபர்கள் ...
- உயர்தர முகாமைத்துவ குழு (படம்)
- கலைப்பிரிவு (2018)
- உயிரியல் விஞ்ஞான பிரிவு (2018)
- வர்த்தக பிரிவு (2018)
- கணித பிரிவு (2018)
- கல்வி உயர் மதிப்பு (கவிதை)
- தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் சரிதை
- மீண்டும் வருவோம் ... (கவிதை)
- பண்பாட்டு கோலங்கள் அன்றும் இன்றும் (கட்டுரை).
- பழி ஓயுமா! (கவிதை)
- கல்வி செல்வம் (சிறுகதை)
- வையாளியின் ஓரத்தில் நின்று ... (கவிதை)
- மனித விழுமியங்கள் (கட்டுரை)
- இனிதாய் ஒரு தருணம் ... (கவிதை)
- நீ நீயாக இரு ... (கவிதை)
- கல்வி என்பது ... (கட்டுரை)
- வருமை தந்தையே! ... (கவிதை)
- வாழ்வின் படிகள் பதினாறு ...
- நிம்மதி தேடிடுவோம் ... (கவிதை)
- இளமை பருவம் ... (கவிதை)
- விவேகானந்தர் பொன்மொழிகள்
- நன்றி நவிலல்



**நூலாக்கக் குழு**

**அதிபர்**
திரு.மு.ரவிதாஸ்


**பொறுப்பாசிரியர்கள்**
திருமதி.சிறிரஞ்சனி நவரெத்தினம்
திரு.சு.சிவசங்கரன்

**இதழாசிரியர்**
செல்வி.இ.நிருபமா

**நூலாக்கக்குழு**
செல்வி.யோ.பிரியசஜீனா
செல்வன்.ர.விதர்சன்
செல்வி.சி.ஜனித்தா
செல்வி.கு.பிரியங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் இவ்வருடம் க.பொ.த (உ/தரப்) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்விற்கும், மாணவர்களின் ஒற்றுமை, கூட்டுணர்வு முயற்சியின் அயராத உழைப்பில் வருடாந்தம் பாடசாலையினை விட்டு வெளியேறும் மாணவர்களின் ஞாபகச்சின்னமாக வெளிவருகின்ற "வையாளி" பிரிவுபசார மலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் உவகை கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல இந்த நிகழ்வானது கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றிக்கடன் கூறுகின்ற வகையிலும் பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற மாணவர்கள் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெரியவர்களிடம் ஆசி பெறுகின்ற நிகழ்வாகவும் அமைகின்றது.

பரீட்சையின் வெற்றியானது ஓர் அவசர சூழ்நிலையில் நேரத்தை சிறந்த முறையில் கையாளும் திறனில் தங்கியுள்ளது. இதற்கு போதிய பயிற்சியும், கடின உழைப்பும் அவசியம். இவ்வருடம் க.பொ.த (உ/தர) பரீட்சைக்கு முகம் கொடுக்கும் அனைத்து மாணவர்களுக்கும் தேவையான வல்லமையை இறைவன் வழங்கவும் சிறந்த பெறுபேறுகளைப் பெறவும் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**திரு.ந.விஜேந்திரன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் உயர்தர மாணவர்களால் வெளியிடப்படும் "வையாளி" எனும் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பாடசாலையில் நாற்பதாவது அகவையில் கால் பதித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் 25வது உயர்தரப்பிரிவு மாணவர்களை ஆசீர்வதித்து வழியனுப்பும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமையடைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களால் சஞ்சிகை ஒன்று ஆக்கப்பட வேண்டும் என்று என்னால் உயர்தர மாணவர் ஒன்றியத்துக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அவர்கள் செயல்வடிவம் கொடுத்துள்ளமை பாராட்டுக்குரியது.

இதில் ஒவ்வொரு வருடமும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் விபரங்கள், மற்றும் ஆக்கங்கள், பாடசாலைத் தரவுகள், சாதனையாளர் விபரங்கள், ஆசிரியர் விபரங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

மேலும் இச் சஞ்சிகையை ஆக்குவதற்கு உதவிய பகுதித் தலைவர் திருமதி. S. நவரெட்ணம் இணைப்பாளர் திரு. S. சிவசங்கரன் மற்றும் பிரதிஅதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று நல்லொழுக்கப் பண்புகளை வெளிப்படுத்துகின்றவர்களாக சிறப்பாக சமுதாயத்தில் மிளிர எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.க.ரவிதாஸ்
அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் அகத்திலிருந்து...

சுவாமி விவேகானந்தரின் திருநாமத்தினைத் தாங்கி நிற்கும் எமது பாடசாலை தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் "வையாளி" என்ற பெயரில் பிரிவுபசார மலரை முதன் முறையாகத் தயாரித்து வெளியிடுகின்றோம்.,

"வையாளி" எனும் தமிழ்ப் பதத்தின் பொருளானது புரவி செல்லும் மார்க்கமாகும். இந்த 2018ஆம் ஆண்டில் எமது பாடசாலையிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர பரீட்சைக்காகத் தம்மைத் தயார்படுத்தி புரவி வேகங்கொண்டு நிற்கும் எமது உறவுகளின் வையாளியில் நின்று வாழ்த்தி வழியனுப்புகின்றோம். இந்த வியாக்கியானமே வையாளி! இது இப்பிரிவுபசாரத்திற்கான எமது விரிப்பாகும். இந்நூலை வெளியிடுவதற்கு வழிகாட்டிய எமது கல்லூரியின் அதிபர் திரு.K.ரவிதாஸ் அவர்களுக்கும், ஆசிரியர் குழாத்திற்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலானது வெளிவருவதற்கு ஆலோசனை வழங்கிய பொறுப்பாசிரியர்களுக்கும் ஆக்கங்களை சமர்ப்பித்த என் சக மாணவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு இந்நூலின் முதலடியை எடுத்து வைக்கிறேன். இந்நூலானது அடுத்தடுத்த பாகங்களாக வளர்ந்து ஒவ்வொரு வருடமும் வெளிவந்து கல்லூரிக்கு பெருமையை ஈட்டித்தர வேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திப்பதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்து உங்கள் முன் வையாளியை சமர்ப்பிக்கின்றேன்.

இதழாசிரியர் : இ.நிருபமா

2019 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின்
# வெற்றிப் பயணத்திற்கு வழிசமைத்த அதிபர்கள் ....

**திரு.V.தங்கவேல்**
10.02.1978 – 14.10.1984

**திரு.K.பாலச்சந்திரஐயர்**
15.10.1984 – 31.12.1990

**திரு.M.மகாதேவன்**
01.01.1991 – 03.04.1992

**திரு.S.நவரெட்ணம்**
04.04.1992 – 23.06.2008

**திரு.N.விஜேந்திரன்**
30.06.2008 – 31.10.2008

**திரு.A.செல்வநாயகம்**
01.11.2008 – 12.06.2012

**திரு.S.மதியழகன்**
19.02.2012 – 04.10.2013

**திரு.S.ஆனந்தசிவம்**
05.10.2013 – 08.09.2017

**திரு.V.தவராஜா**
09.09.2017 – 22.10.2017

**திரு.K.ரவிதாஸ்**
23.10.2017 இலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைப்பிரிவு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிரியல் விஞ்ஞானப் பிரிவு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணிதப் பிரிவு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணிகப்பிரிவு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகை மாணவர் விபரம்

## கலைப்பிரிவு

**லோகிதராஜா. குகேந்திரன்**

கங்குவேலி, தெகிவத்தை, மூதூர்.

**சுந்தரலிங்கம். டெண்டுல்காந்**

லிங்கபுரம், கிளிவெட்டி.

**லிங்கேஸ்வரன். சஜீவன்**

இல. 19/5, மத்திய வீதி, உவர்மலை.

**தர்ஷாலினி. அன்புக்கரன்**

இல. 38/6, சுமேதமே, கண்டிறோட், திருகோணமலை.

**லக்ஷனா. செல்வராசா**

இல. 40/18, சிவபுரி, உவர்மலை.

**ஜினோசா. இராஜலிங்கம்**

கங்குவேலி, தெகிவத்தை, மூதூர்.

**நிவேகா. வினாயகமூர்த்தி**

இல. 38/19, லோவர் வீதி, உவர்மலை.

**தட்சாயினி. திருச்செல்வம்**

இல. 34, ஸ்பெல்வின் வீதி, உவர்மலை.

**சஞ்சனா. கெமில்டன்**

இல. 16/2, கண்ணகிபுரம், உவர்மலை.

**சரண்ணியா. தவபாலன்**

இல. 43/11B, தேன்தமிழ்வீதி, உவர்மலை.

**அனுஷியா. இராசநாதன்**

இல. 25/11A, 3ம் ஒழுங்கை, லிங்கநகர்.

**லக்ஷாயினி. கெங்காதரன்**

இல. 96/7, பெல்வின் வீதி, உவர்மலை.

**மதுர்சிக்கா. சுரேஸ்**

இல. 297/A, அன்புவழிபுரம்.

**தர்மினி. லோகேஸ்வரன்**

இல. 320/65, புதுக்குடியிருப்பு, வரோதயநகர்

**லோஜினி. சுரேஸ்வரன்**

பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர்

**ரம்மியா. பரமேஸ்வரன்**

இல. 39, கோணேசபுரம், உவர்மலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரியல் விஞ்ஞான பிரிவு

**தேவராசா கஸ்யுசன்**

இல.18, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை.

**சேவியர் ஜொய்காலேப்**

இல.180/2A, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை.

**லவகுகராசா கஜீகரன்**

இல.8A, 2வது ஒழுங்கை, ஆனந்தபுரி, புளியங்குளம், திருகோணமலை.

**காண்டீபராசா சுதர்சன்**

இல.187/9A, முருகன் கோயில் வீதி, லிங்கநகர், திருகோணமலை.

**தங்கராசா சதுர்சன்**

இல.18/25, 1வது ஒழுங்கை, மட்கோ, திருகோணமலை.

**நிஷ்வகி செல்லத்துறை**

இல.17A/1, மத்தியவீதி, உவர்மலை, திருகோணமலை.

**மயூரதி சதானந்தசிவம்**

இல.89/15, ஊவுடீவீதி, உப்புவெளி, திருகோணமலை.

**ருனிஷா மகேந்திரராஜா**

இல.225, காந்திநகர், திருகோணமலை.

**கபிஷா பரமசிவம்**

இல.230, 1வது ஒழுங்கை, அன்புவழிபுரம்.

**ஜொஸ்னி நாகராஜா**

இல.9/36, விகாரைவீதி, திருகோணமலை.

**நிவேதிகா தேவராஜா**

இல.123, துறைமுகவீதி, உவர்மலை, திருகோணமலை.

**பிறிஸ்சில்லா கிங்ஸ்லி**

நாவற்சோலை, கும்பிறுபிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகப் பிரிவு

**செல்வராஜா விவேக்**

இல.39, மக்கேசர் வீதி, உவர்மலை.

**குகதாசன் பிரதாப்**

இல.449, அண்ணாநகர், அன்புவழிபுரம்.

**விமலதாஸ் யதுசன்**

இல.40A, திருஞானசம்பந்தர்வீதி, திருகோணமலை.

**திருமாறன் நிரோசன்**

இல.39A, திருஞானசம்பந்தர்வீதி, திருகோணமலை.

**ஜெயக்குமார் சாம்சன் ஜெயந்தன்**

இல.43/28, ஆசிரியர்சதுர்க்கம், திருகோணமலை.

**அன்டனிராஜா ஹரன்**

இல்.274, அன்புவளிபுரம், திருகோணமலை.

**இராஜரெட்ணம் டில்சான்**

இல.35/7, பூம்புகார்வீதி, திருகோணமலை.

**கிரிதரன் விதுர்சனன்**

இல.106, லோவர்வீதி, திருகோணமலை.

**காளிராசா ஹரிகரன்**

இல.23B, உட்துறைமுகவீதி, திருகோணமலை.

**ரங்கநாதன் ரஜன்**

இல.296/D, லிங்கபுரம் LB-3 கிளிவெட்டி.

**சித்திரவேலாயுதம் கிருபரன்**

சம்பூர் - 4 மூதூர்.

**சந்திரசேகரம் சுஜன்**

அலஸ்தோட்டம், பைசன்நகர், கன்னியா, திருகோணமலை

**ரமேஸ் விக்டர்**

இல.1176, பாலையூற்று, திருகோணமலை.

**மோகனராசா டிலுக்சன்**

இல.01, மயானவீதி, திருகோணமலை.

**ரகீஷா வசந்தகுமார்**

இல.845/3,பாடசாலைவீதி, திருகோணமலை.

**தக்ஷண்யா சித்திரகுமார்**

இல.54/6, ஸ்பெல்வின்வீதி, திருகோணமலை.

**தர்ஷிகா ஜெயதாஸ்**

இல.48/19, இராஜவரோதயசதுர்க்கம், திருகோணமலை.

**கிர்த்திகா ரவிச்சந்திரன்**

இல.38/19A, லோவர்வீதி, திருகோணமலை.

**தர்ஷிக்கா**

பட்டிமேடு தம்பலகாமம், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதப் பிரிவு

**ஸ்ரீராதாகிறிஸ்ணன் நதீசன்**

இல.1187, பாலையூற்று, திருகோணமலை.

**டிலக்ஷன் புருஷோத்மன்**

இல.61/8, விகாரைவீதி, திருகோணமலை.

**பேரின்பமூர்த்தி ஜதுர்ஷன்**

இல.814, NCவீதி, திருகோணமலை.

**கதானந்தகுமார் மேகசன்**

இல.88, 1வது ஒழுங்கை, மத்தியவீதி, திருகோணமலை.

**உதயகுமார் லினோஜன்**

இல.215, 2வது ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை.

**குணரெட்ணம் சுஜிகாந்**

இல.33/8, சிவபுரி, திருகோணமலை.

**ஜெயபரன் ஜதுர்ஷன்**

இல.62/2, மக்கேஸர்வீதி, திருகோணமலை.

**தவராஜா திபிகேஷ்**

இல.205/8, கண்டிவீதி, பாலையூற்று, திருகோணமலை.

**ஜெயதாஸன் துஷியந்தன்**

இல.466/1, பவஹவுஸ்வீதி, திருகோணமலை.

**ரத்னேஸ்வரன் சுகந்தன்**

இல.18/15, நாளாந்தரபுர, சீனன்குடா, திருகோணமலை.

**எட்வின்கூரே சுஜந்தன்**

இல.132/133, அலஸ்தோட்டம், நிலாவெளி.

**ரவிக்ஷனா அற்புதரவி**

இல.35, மத்தியவீதி, திருகோணமலை.

**டதுர்ஷி உதயக்குமார்**

இல.28/10, லோவர்வீதி, திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே உயர் மதிப்பு!

மைக்கல் ஆஞ்சலோ சரண்
2019 கலை

தேடிப் பெறவேண்டிய சித்து
தேடி வைத்து பார்க்கும் போது முத்து
கோடி இன்பம் தந்திடும் வித்து
அதுவே கல்வி என்பது பொதுச் சொத்து

புத்தகத்திலிருக்கும் போது எழுத்து
தத்துவமாய் சொல்லும் போது கருத்து
அதை பயன்படுத்துவது உன்னை பொறுத்து
கல்வியே உண்மை செல்வமென உன் மனதில் நிறுத்து

கல்வியை எதிர்ப்பவரை வருத்து
ஆசானை பேசாதே மறுத்து
அதை இன்னமும் நீ வலியுறுத்து
நாளை உன் பெயர் பொன் எழுத்து

கல்வி என்பது மூன்றெழுத்து
இளமைக் கல்வியோ சிலை எழுத்து
கல்வியில் உன்னை முழுமையாய் ஈடுபடுத்து
அதனால் நீ பொறுவாய் உயர் மதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் சரிதை

செல்வி.இ.நிருபமா
ஆசிரியர்

உவர்மலை விவேகானந்தா கல்லூரி
ORR'S HILL VIVEKANANDA COLLEGE

கோகர்ணம் என்னும் தென்கயிலை என்றும் புகழப்படும் தலம் கொண்ட திருகோணமலை நகரின் கண்ணே முப்புறமும் கடலால் சூழப்பட்ட இயற்கை எழிலுடன் கண்ணகியால் காவலுடன் உயர்ந்து நிற்கும் உவர்மலை மண்ணிலே, பாரதத்தின் பரமஞானி பார்புகழும் சுவாமி விவேகானந்தரைப்போன்று அவரது நாமந்தாங்கி மிடுக்குடன் உயர்ந்து நிற்கிறது உவர்மலை விவேகானந்தா கல்லூரி. இன்று நாற்பதாவது அகவையை நிறைவு செய்து பெருமிதத்தோடு வீறுநடை போடுகின்றது.

அன்னச்சத்திரம் ஆயிரம் வைப்பதை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உயரிய தர்மமாகும் என்றான் பாரதி. அந்த வகையில் அமரர்.திரு.V.வேலுப்பிள்ளை அவர்கள் எமது கல்லூரியை ஸ்தாபகம் செய்தார். தானங்களில் சிறந்த தானமாகிய கல்வித்தானத்தை பிள்ளைகளுக்கு வழங்கி உவர்மலை வாழ்மக்களின் பிள்ளைச் செல்வங்களுடைய எதிர்காலம் சுபீட்சமாக அமைய வேண்டும் என்னும் இலக்கோடும் உயரிய சிந்தனையோடும் அடர்ந்த அடவியாகிக் கிடந்த நிலத்தை உவர்மலை மக்களின் ஆதரவோடு செப்பனிட்டார். அமரர்.திரு.V.வேலுப்பிள்ளை அவர்களின் கடின உழைப்பாலும் அயராத முயற்சியாலும் தென்னங்கிடுகு கூரையைக் கொண்டு ஓர் ஓலைக் கொட்டில் உதயமாகியது. அக இருளை அகற்றி ஞானஒளியைப் பரப்பும் இந்த வித்தியாலயத்திற்கு உவர்மலை தமிழ் வித்தியாலயம் என்னும் நாமம் சூட்டி 1978 ஆம் வருடம் மாசித்திங்கள் 10ம் திகதி 97 மாணவமணிகளுடன் 4 ஆசிரியப் பெருந்தகைகளுடன் V.தங்கவேலை முதலாவது அதிபராக கொண்டு இன்றைய எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தே அவரால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டு திரு.V.வேலுப்பிள்ளை அவர்களால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. கல்லூரியின் உருவாக்கத்திற்கு ஸ்தாபகரோடு, உவர்மலை மக்கள், கிராம அபிவிருத்திச்சங்கம், அதிபர் ஷீ.வே.சாம்பசிவஐயர், நலன்விரும்பிகள் போன்றோரும் தோள் கொடுத்து இணைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலை ஜனனமாகி நான்கு ஆண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை 400 ஆகவும் ஆசிரியர்களின் தொகை 14 ஆகவும் அதிகரித்தது. 1984 இல் திரு.கு.பாலச்சந்திரஜயர் முதல்வராக கடமையேற்று எமது பாடசாலை தரம் II பாடசாலையாக உயர்த்தப்பட்டு க.பொ.த (சா/த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1991 ஆம் ஆண்டில் திரு.மகாதேவன் அவர்கள் அதிபராக பணியாற்றும் காலப்பகுதியில் உயர்கலைப்பிரிவு உயர்தர கலைப்பிரிவு கால்கோலிடப்பட்டது. பின்னர் எமது கல்லூரியானது 1உ பாடசாலைக்கு தரமுயர்த்தப்பட்டதோடு உவர்மலை விவேகானந்தா மகாவித்தியாலயம் என்னும் நாமத்தை சூடிக்கொண்டது.

1992இல் திரு.சி.நவரெத்தினம் அவர்கள் அதிபராக பதவியேற்றுக்கொண்டார். பதினான்கு வருடங்களுக்குப்பிறகு முதன்முறையாக பரிசளிப்பு விழாவும், முதல் சஞ்சிகை மலையருவியும் அறங்கேறியது. இவ் விழா கலாசாரமண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றது. 1994 ஆம் ஆண்டு கல்லூரியின் சரிதையில் பெருமாற்றம் ஏற்பட்டது. கணித, விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 1ஏபி பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டதுடன் உவர்மலை விவேகானந்தா கல்லூரி என பெயர் மாற்றம் பெற்று தனது சாதனைப்பாதையில் வெகு வேகமாக வீறுநடை போடுகின்றது. 2001ம் ஆண்டு கல்லூரியின் வரலாற்றில் மிகப் பெரிய சாதனையாக 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 50 வீதமானோர் 157 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர். கல்லூரியின் பௌதீக வளர்ச்சியின் உச்ச நிலையை இக் காலப்பகுதியில் அடைந்தது. அவற்றில் உன்னத வெளிப்பாடாக அமைவது கலைநயத்தோடு நிமிர்ந்து நிற்கும் கலையரங்காகும். அவ்வாறான பிரமாண்டமான கலையரங்கினை எப்படியும் கட்டி முடித்து விட வேண்டும் என்ற உறுதியோடு அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டார் அதிபர் திரு.சி.நவரத்தினம் அவர்கள் இதற்கு காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துறையின் உதவியும் காலத்திற்குக் காலம் சேவையில் இருந்த கல்விச்செயலாளர்களின் உதவியும் பெரும் பங்காற்றியது. இக்கலையரங்கு அன்றைய ஆளுனர் காமினி பொன்சேகாவினால் அடிக்கல் நாட்டப்பட்டு 2006ல் திறந்து வைக்கப்பட்டது.

இதே அதிபரின் சேவைக்காலத்தில் மாணவர்கள் தங்கி கல்வி கற்பதற்குரிய மாணவர் விடுதிக்கும் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. பின்னர் திரு.ஆ.செல்வநாயகம் அதிபர் அவர்களின் காலத்தில் (2010) சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

இக்கல்லூரிக்காக அரும்பணியாற்றிய அதிபர்களின் வரிசையில் திரு.சி.நவரத்தினம் அவர்கள் சுமார் 16 வருட சேவைக்காலத்தில் (1992 - 2008) மகத்தான சேவையாற்றி ஓய்வு பெற்றார். இவரது சேவைக்காலம் கல்லூரியின் வரலாற்றில் மிகவும் உன்னதமானது. இவரது சேவையை மெச்சி கல்லூரி சமூகம் இன்றும் நினைவு கூர்ந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு பக்கபலமாக பிரதிஅதிபர்களும் முகாமைத்துவக் குழுவினரும் அர்ப்பணிப்புடனான ஆசிரியர் குழாமும் பாடசாலை அபிவிருத்திக்குழு மற்றும் பழைய மாணவர் சங்கத்தினரும் ஏனைய நலன் விரும்பிகளும் கொடுத்த பேராதரவு மிக முக்கியமானதாகும்.

இவர்களைத் தொடர்ந்து இக் கல்லூரியின் வளர்ச்சியின் சிகரத்தை அடைய வேண்டும் என்பதற்காக அதிபர் திரு.க.ரவிதாஸ் 2017.10.23 இல் கடமையேற்று தனது சிறிய முகாமைத்துவத்தின் கீழ் இக் கல்லூரியை சிறப்பாக வழிநடத்திச் செல்கிறார். இவருக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், பழைய மாணவர் சங்கத்தினரும் உறுதுணையாக உள்ளனர்.

எமது பாடசாலை சாரணர் குழு தேசிய ரீதியில் சிறந்த துருப்பாக தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கால கட்டங்களில் எமது கல்லூரி மாணவர்கள் கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானத் துறைகளிலும் மற்றும் இணைய பாட விதானங்களில் குறிப்பாக தமிழ்த்திறன் போட்டிகள் சமூக விஞ்ஞானப் போட்டிகள் அழகியல் துறைகளிலும் விளையாட்டு துறைகளிலும் பல தேசிய சாதனைகளை நிலைநாட்டி இருக்கிறார்கள். கடந்த 8 வருடங்களாக எமது பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடம் எமது பிராந்தியத்தில் ஏனைய முதற்தர பாடசாலைகளையும் விட சிறந்ததாக தெரிவு செய்யப்படுகின்றமை பெருமைமிகு விடயமாகும். மேலும் உயர் பதவிநிலைகளிலும் உயர்மட்டங்களைப் பெற்றவர்களாகவும் பெருந்தொகையான மாணவர்கள் திகழ்கின்றனர். 2017இல் க.பொ.த உயர்தர கணிதப் பிரிவில் 100% மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியெய்தி பாடசாலைக்கு பெருமை சேர்த்திருந்தனர். மிகக் குறுகிய காலத்தில் எண்ணற்ற கல்விமான்களை நற்பிரஜையாக்கி சமூகத்திற்கு அளித்திருக்கின்ற உவர்மலை விவேகானந்தா கல்லூரி இன்னும் பல சாதனைகளைப் புரியும் சிகரம் தொடும் என்பதில் ஐயமில்லை.

எமது பாடசாலை மாணவர்கள் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்று திருக்கோணமலையின் கல்வி வரலாற்றை ஒருபடி மேலுயர்த்தியிருக்கின்றார்கள் என்றால் அது மிகையில்லை. க.பொ.த உயர்தரம் வர்த்தகப் பிரிவில் 2004 இல் செல்வன் கிருபைராஜா கோகிலன் அகில இலங்கை ரீதியாக தமிழ்ப் பிரிவில் முதலிடம் பெற்றிருந்தார். விஞ்ஞானப் பிரிவில் 2014 இல் செல்வன் சிவகுமார் பிரபாலினி இந்துஜன் அகில இலங்கை ரீதியாக 3 ஆம் இடமும் தமிழ்ப்பிரிவில் முதலாமிடமும் கலைப்பிரிவில் 2009 இல் செல்வி மாதினி விக்னேஸ்வரன் அகில இலங்கை ரீதியாக 4ஆம் இடமும் கணிதப்பிரிவில் 2016இல் செல்வன் திருநாவுக்கரசு பிரதாபன் அகில இலங்கை ரீதியாக 7ஆம் இடமும் பெற்றிருந்தார். இவ்வாறு பல சாதனை நிகழ்த்தியது எமது பாடசாலை என்பதில் பெருமிதம் கொள்கின்றோம். இவைகள் எமது பாடசாலையின் உச்ச மட்ட எழுச்சிக்கான அடையாளங்கள் என்றால் அது மிகையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருவோம் . . .

செல்வி. ஜெயசங்கர் பிரணவி
2019 உயிரியல்

நீலக்கடல் தலை நிமிர்ந்து சொல்லும் - பரந்த
நீண்ட ஆறும் வியந்து சொல்லும் - தினமும்
கோணமலை நகர் அருள் புரியும் - எழில் மிகு
கல்வி முத்து - உவர்மலை விவேகானந்தா கல்லூரி!


விவேகானந்தம் ஒளி தந்து அறிவு
பொங்கும் கல்லூரி அன்னையே
உலகின் நடுவே சஞ்சரிக்கும் நல்லவுள்ளங்களை
கல்வி, ஒழுக்கம், தூய்மை என்னும் உன் கரங்களால் காப்பாயே!

பாடசாலை வண்ணாத்துப்பூச்சி பூந்தோட்டம் போல்
வகுப்பிலே நண்பர் கூட்டம்
பூவைத் தாங்கும் காம்பு போல் - எம்மைத்
தாங்கும் ஆசான் கூட்டம் இனியும் காண்போமா??

அதிபரின் சேவையாலும் ஆசிரியரின் அர்ப்பணிப்பாலும்
மாணவர் திறமையாலும் நண்பனின் உதவியாலும்
புது சரித்திரம் படைப்போம், உலகை
வெல்வோம் என்றும் துடிப்போம்!

நல்லொழுக்கத்துடன் 13 வருடம் என்னை - தன்மையாய்
பார்த்த என் அன்னையை மறப்பேனா! - என்வாழ்வில்
ஆய கலைகள் மூலம் அகிம்சையாய் எம்மை
கொத்திபுரட்டிய மண்வெட்டி நீயே - நீ வாழ்க உன் சேவை வாழ்க!

13 வருடங்கள் உன் அரவணைப்பில் இருந்தோம்
பிரியாவிடை என்று கூறி உன்னிடம் இருந்து பிரியவில்லை
மீண்டும் வருவோம் எம் கல்லூரி நினைவுகளுடன்
எங்கள் பாடசாலையை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T/ ORR'S HILL VIVEKANANDA COLLEGE

## PRINCIPALS – 2018

| Name | Designation |
|---|---|
| **Mr. K. Ravithas** | Principal |
| **Mr. V. Thavarajah** | Dy.Principal |
| **Mr. R. Jeyakanth** | Asst.Principal |
| **Mr.C. Deogupillai** | Asst.Principal |
| **Mrs. S. Kokuladasan** | Asst.Principal |
| **Mr. M. Pragash** | Asst.Principal |

## TEACHERS' NAME LIST – 2018
## PRIMARY

| Teacher's Name |
|---|
| Mr. M. Pragash |
| Mrs. R. Vipulanantha |
| Mrs. K. Uruthramoorthy |
| Mrs. K. Sivasamy |
| Mrs. J.S. Baskaran |
| Mrs. S. Jeyatharan |
| Miss, K. Kodeeswary |
| Miss. K. Subashini |
| Mrs. J. Sounthararajah |
| Miss. N. Navambihai |
| Mrs. S.Namaskantharajah |
| Mrs. S. Vajeeharan |
| Mrs. S. Karunakaran |
| Mrs. S. Sureshkumaran |
| Mrs. R. Yuvaraj |
| Mrs. T. Amirthalingam |
| Mrs. K. Sivashanthi |
| Mrs.V. Srikanthan |
| Mrs. T. Kalirasah |
| Mrs. K. Puvanendran |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T/ ORR'S HILL VIVEKANANDA COLLEGE
## TEACHERS' NAME LIST – 2018
## SECONDARY

| Teacher's Name | Teacher's Name |
|---|---|
| Mr. K. Ravithas | Mrs. C. Yuvarajkumar |
| Mr. V. Thavarajah | Miss. C. Subani |
| Mr. R. Jeyakanth | Mrs. P. Baskaranathan |
| Mr.C. Deogupillai | Mrs. T. Gangatharan |
| Mrs. S. Kokuladasan | Mrs.R. Thayaparan |
| Mrs. V. Sarveswaran | Mrs.A.Logeswaran |
| Mrs. S. Arulananthan | Mrs. A. Jeyanthan |
| Mrs. S. Jegatheeswaran | Mrs.A. Kantharupan |
| Mrs. M.S.C. Shakespear | Mrs. U. Subagini |
| Mrs. A. Janahan | Mrs. N. Swaminatha sarma |
| Mrs. A. Thavasegar | Mrs. T. Ashok |
| Mrs. L. Yogaretnam | Mr. S. Thirumaran |
| Mrs. M. Sriranganathan | Mrs .S. Manivannan |
| Mr. P. Nithyanantham | Mr.V. Ajanth |
| Mrs. S. Navaratnam | Mrs.P.Umamahesan |
| Mr. L. Nagalingam | Miss. A. Vijitha |
| Mr. A. Raveendran | Mr. S. Sivashankaran |
| Mr. V. Sivachandraventhan | Mrs. N. Nanthakumar |
| Miss. V. Sivachandra janani | Miss. S. Mayuri |
| Mrs. U. Aiyncaran | Mrs. I.P. Anuraja |
| Mrs. R. G. Jeyakumar | Mr. A. Ahilan |
| Mrs. S.Manojkumar | Mrs. K. Thirukumaran |
| Mr. S.Kamaleswaran | Miss. C. Anusha |
| Mr. N. Umashanker | Mr. P. Nirmalathasan |
| Mrs. V. Rajasegar | Mr. R. Ketheeswaran |
| Mr. N. Vaseeharan | Mr. S. Baskaran |
| Mr. V. Mohanarajah | Mrs. V. Robert |
| Mr. V. Uthayasooriyan | Mr.S. Mathan |
| Mr. V. Sunthararajan | Mr. R. Mithunan |
| Mrs. V. Gangatharan | Mrs. P. Sahana |
| Mrs. J. Vijithakumar | Mr. N. Thanusan |
| Mr. P. Konalingam | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளில் வெற்றியீட்டிய கல்லூரி மாணவர் விபரம் - 2017

| இல | மாணவர் பெயர் | போட்டி | பிரிவு | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | து.கம்ஷனா | தனிநடனம் | 2 | 1 | 1 | 1 | 1 |
| 2 | சூ.டனீஷா | தனிநடனம் | 3 | 2 | - | - | - |
| 3 | இ.நிருபமா | தனிநடனம் | 4 | 1 | 1 | 1 | 3 |
| 4 | ஜெ.பிரியதர்ஷினி | தனிநடனம் | 5 | 1 | 1 | 3 | - |
| 5 | ரா.அனுஷியா | தனி இசை | 5 | 2 | - | - | - |
| 6 | கெ.கோபிகா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 7 | பெ.கோபிஷா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 8 | க.டற்ஷிகா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 9 | சு.சஞ்சுகா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 10 | நா.கர்ஷிகா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 11 | செ.ஹம்சினி | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 12 | பா.போஷிகா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 13 | க.வேரண்யா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 14 | ம.நிதர்ஷனா | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 15 | உ.சுஜிவர்ணி | குழு நடனம் | 3 | 1 | 1 | 2 | - |
| 16 | ஜெ.மோல்டர் | வாசிப்பு | 2 | 3 | - | - | - |
| 17 | உ.தமிழரசி | இலககணம் | 5 | 3 | - | - | - |
| 18 | M.தனுஜன் | விஞ்ஞான வினாடி வினாப்போட்டி | 7D | 3 | - | - | - |
| 19 | G.கோபிகா | கட்டுரைப்போட்டி | 9B | 3 | - | - | - |
| 20 | J.பிரகஸ்வி | ஆங்கில தினப்போட்டி | 9C | 3 | - | - | - |
| 21 | M.தனுஜன் | ஒலிம்பியாட் | 6 | | - | பங்களிப்பு | - |
| 22 | R.நேரசிகா | விஞ்ஞான வினாடி வினாப்போட்டி | 6 | 1 | 1 | 2 | - |
| 23 | R.நேரசிகா | பரீட்சை - விஞ்ஞானம் | 6 | 3 | - | - | - |
| 24 | R.நேரசிகா | Copy Writing | 6 | 3 | - | - | - |
| 25 | S.மிதுஷாந் | பரீட்சை - விஞ்ஞானம் | 6 | 1 | | | - |
| 26 | S.நிதர்ஷன் | விஞ்ஞான வினாடி வினாப்போட்டி | un -20 | 3 | - | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மாணவர் பெயர் | போட்டி | பிரிவு | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 27 | S.விதுர்ஷிகன் | 200m | un -20 | 3 | - | - | - |
| 28 | J.ஜதுர்ஷன் | 5000m | un -16 | 2 | - | - | - |
| 29 | T.கிருஷோத் | 100m | un -16 | 1 | 1 | 3 | - |
| 30 | T.கிருஷோத் | 400m | un -16 | 1 | 1 | 3 | - |
| 31 | T.கிருஷோத் | 200m | un -16 | 1 | 1 | 3 | - |
| 32 | S.கபிஷன் | 400m | un -16 | 2 | - | - | - |
| 33 | S.கபிஷன் | 800m | un -16 | 2 | - | - | - |
| 34 | T.தனுபவன் | 800m | un -16 | 1 | - | - | - |
| 35 | T.தனுபவன் | 300m | un -16 | 3 | - | - | - |
| 36 | T.தனுபவன் | 4x100m | un -16 | 2 | - | - | - |
| 37 | U.தனுஷிகன் | விஞ்ஞான வினாடி வினாப்போட்டி | 8 | 3 | - | - | - |
| 38 | S.அஸ்வின் | Innovation | 10 | | | | பங்களிப்பு |
| 39 | L.திபேஸ்வரன் | Innovation | 10 | 1 | | | - |
| 40 | S.தெனுசன் | Innovation | 10 | 1 | | | பங்களிப்பு |
| 41 | P.கேதாரன் | Innovation | 10 | 1 | | | - |
| 42 | V.டிவிக்ஸரன் | Innovation | 9 | | | | - |
| 43 | R.கிஷாந் | Innovation | 9 | | | | - |
| 44 | U.தமிழரசன் | Innovation | 9 | | | | - |
| 45 | C.நிவிராம் | Innovation | 9 | | | | - |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளில் வெற்றியீட்டிய கல்லூரி மாணவர் விபரம் - 2018


| இல | மாணவர் பெயர் | போட்டி | பிரிவு | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | K.வேரண்யா | தனிநடனம் | 2 | 1 | 1 | 1 | தெரிவு |
| 2 | T.திவ்யா | தனிநடனம் | 4 | 1 | 1 | 2 | - |
| 3 | B.கோபிஷா | தனிநடனம் | 3 | 2 | - | - | தெரிவு |
| 4 | R.நதுர்ஷியா | தனி இசை | 5 | 1 | 1 | 1 | தெரிவு |
| 5 | Y.பிரியசஜினா | நாட்டிய நாடகம் | 12கலை(2019) | 1 | 1 | 1 | தெரிவு |
| 6 | M.டக்ஷிகா | நாட்டிய நாடகம் | 12கலை(2019) | 1 | 1 | 1 | தெரிவு |
| 7 | T.திவ்யா | நாட்டிய நாடகம் | 11டி | 1 | 1 | 1 | தெரிவு |
| 8 | G.கிஷானி | நாட்டிய நாடகம் | 11சி | 1 | 1 | 1 | தெரிவு |
| 9 | K.பிரபா | நாட்டிய நாடகம் | 11சி | 1 | 1 | 1 | தெரிவு |
| 10 | P.டிலக்ஷிகா | நாட்டிய நாடகம் | 11டி | 1 | 1 | 1 | தெரிவு |
| 11 | Y.சஜித்தா | நாட்டிய நாடகம் | 11சி | 1 | 1 | 1 | தெரிவு |
| 12 | T.சப்தவி | நாட்டிய நாடகம் | 11டி | 1 | 1 | 1 | தெரிவு |
| 13 | L.லிலானி | நாட்டிய நாடகம் | 12கலை(2020) | 1 | 1 | 1 | தெரிவு |
| 14 | S.பவித்ரா | நாட்டிய நாடகம் | 7சி | 1 | 1 | 1 | தெரிவு |
| 15 | K.வேரண்யா | நாட்டிய நாடகம் | 7சி | 1 | 1 | 1 | தெரிவு |
| 16 | L.செந்தூரி | நாட்டிய நாடகம் | 10சி | 1 | 1 | 1 | தெரிவு |
| 17 | வி.மிதுஷானியா | ஆக்கம் - எழுத்து | 1 | 1 | | - | - |
| 18 | அ.டினோஜிதா | வாசிப்பு | 1 | 3 | - | - | - |
| 19 | பா.போஷிஹா | பாவோதல் | 3 | 3 | - | - | - |
| 20 | B.தனோவன் | கணித ஒலிம்பியாட் | 6சி | 1 | - | - | - |
| 21 | T.கோபிகேஷன் | புத்தாக்கப் போட்டி | 8டி | 1 | - | - | - |
| 22 | K.லக்ஷ்மனன் | புத்தாக்கப் போட்டி | 8டி | 1 | - | - | - |
| 23 | B.ஜகதீசன் | புத்தாக்கப் போட்டி | 7டி | - | 1 | 2 | - |
| 24 | U.தனுஷிகன் | கணித ஒலிம்பியாட் | 9ஏ | - | - | - | - |
| 25 | P.Kishobika | Hand Writing | 10 | 1 | - | - | - |
| 26 | K.Shalini | Hand Writing | 13 | 1 | - | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மாணவர் பெயர் | போட்டி | பிரிவு | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 27 | T.Hamsana | Dictation | 7 | 3 | - | - | - |
| 28 | T.Yukege | Creative Writing | 10 | 3 | - | - | - |
| 29 | K.Keshayini | Creative Writing | 13 | 3 | - | - | - |
| 30 | B.Koshika | Recitation | 5 | 2 | - | - | - |
| 31 | B.Poshika | Recitation | 9D | 2 | - | - | - |
| 32 | T.Kalpana Seventhi | Cursive Script | 12 | 2 | - | - | - |
| 33 | U.Thanushigan | Maths Olimbiad | 9 | | - | பங்களிப்பு | - |
| 34 | K.Rubasri | Innovation | Senior | 1 | - | - | - |
| 35 | M.Edisun | Innovation | Senior | 1 | - | - | - |
| 36 | T.Kamshigan | Innovation | Senior | 2 | - | - | - |
| 37 | S.Thenusan | Innovation | Senior | 7 | - | - | - |
| 38 | V.Rivoshini | Singing | Junior | 3 | - | - | - |
| 39 | T.Abisha | Singing | Junior | 3 | - | - | - |
| 40 | J.Ann Delisiya | Singing | Junior | 3 | - | - | - |
| 41 | S.Maathusha | Singing | Junior | 3 | - | - | - |
| 42 | S.Deepika | Singing | Junior | 3 | - | - | - |
| 43 | T.Rishapthika | Singing | Junior | 3 | - | - | - |
| 44 | S.Hamsini | Singing | Junior | 3 | - | - | - |
| 45 | Y.Meha | Singing | Junior | 3 | - | - | - |
| 46 | M.Nitharsana | Singing | Junior | 3 | - | - | - |
| 47 | T.Thanuja | Singing | Junior | 3 | - | - | - |
| 48 | S.Kabishalini | Singing | Junior | 3 | - | - | - |
| 49 | S.Sarmili | Singing | Junior | 3 | - | - | - |
| 50 | T.Kamsana | Singing | Junior | 3 | - | - | - |
| 51 | S.Pavithra | Singing | Junior | 3 | - | - | - |
| 52 | R.Lithursika | Singing | Junior | 3 | - | - | - |
| 53 | A.Tharuksha | Singing | Junior | 3 | - | - | - |
| 54 | P.Ananthika | Singing | Junior | 3 | - | - | - |
| 55 | R.Sharmini | Singing | Junior | 3 | - | - | - |
| 56 | T.Thursika | Singing | Junior | 3 | - | - | - |
| 57 | S.Subothini | Singing | Junior | 3 | - | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மாணவர் பெயர் | போட்டி | பிரிவு | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 58 | K.Vijayatharani | Singing | Junior | 3 | - | - | - |
| 59 | S.Sriluxmanan | Innovation | Junior | 1 | - | - | - |
| 60 | T.Kobikeshan | Innovation | Junior | 1 | - | - | - |
| 61 | B.Jatheeshan | Innovation | Junior | 2 | - | - | - |
| 62 | V.Vignesh | Bible Quiz | Senior | 1 | - | - | - |
| 63 | D.Jebona | Bible Quiz | Senior | 1 | - | - | - |
| 64 | D.Jerusha | Bible Quiz | Senior | 1 | - | - | - |
| 65 | S.Serubi | Bible Quiz | Senior | 1 | - | - | - |
| 66 | B.Thanuova | Maths Olimbiad | 9A | - | - | பங்களிப்பு | - |
| 67 | S.Serubi | Maths Olimbiad | 6A | - | - | பங்களிப்பு | - |
| 68 | D.Dilukshan | Maths Olimbiad | 12 Maths | - | - | - | - |
| 69 | D.Dilukshan | Chess | U20 | - | - | 2 | - |
| 70 | K.Harishanth | Chess | U20 | - | - | 2 | - |
| 71 | M.Vathusan | Chess | U20 | - | - | 2 | - |
| 72 | S.Rishikeshan | Chess | U20 | - | - | 2 | - |
| 73 | K.Koparthanan | Chess | U20 | - | - | 2 | - |
| 74 | A.Subasanan | Chess | U20 | 3 | - | 2 | - |
| 75 | K.Kathisman | Chess | U20 | - | - | 2 | - |
| 76 | A.Micheal John | Chess | U20 | 4 | - | 2 | - |
| 77 | T.Yukayge | Karate | Un 16 | - | - | 3 | - |
| 78 | T.Anojh | Karate | Un 16 | - | - | 3 | - |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி ஓயுமா!

செல்வி.S.டிலானி
2019 கலை

விந்தை விதைத்தார் தந்தையவர் - ஒரு
விந்தை தனையே விளைத்திட்டார்!
தந்தை விருப்புக்கு ஒத்தானது - தாய்
தன்னைக் கொடுத்து அவளாமை!

வந்து பிறந்தேன் நானப்பா — துயர்
வாழ்வில் காண்பது ஏனப்பா?
சொந்தம் பந்தம் பலநூறு - இருந்தும்
சோகம் காண்பது பெறுநூறு!

அந்தோ வாழ்வு பரிதாபம் - பிறர்
அல்லும் பகலும் பரிகாசம்
விந்தை என்பது இது தானா? — நான்
வந்து பிறந்தது அதுவீணா?

போர்வை, மாலை, புகழ், காசு — ஏழைப்
புலவன் எனக்கு இவைதூசு!
பார்வை சமூகப் பண்பாடு — எனைப்
பார்ப்பவர் பலர்க்குள் முரண்பாடு

கொஞ்சக் காலம் புவி வாழ்க்கை - இதைக்
கொண்டு நடத்திட இந் யாக்கை
பஞ்சம் பட்டினி தீர்த்திடலாம் - பழி
பகர்பவர் குரல்கள் ஒய்ந்திடுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்செல்வம்

(சிறுகதை)

செல்வி.Y.பிரியசஜீனா
2019 கலை

மணி 7.00 ஆகியது. பாரதி இன்னமும் நித்திரை விட்டு எழும்பவில்லை. தாய் யோசித்தபடி சென்று "பாரதி! எழுந்திரு. பாடசாலைக்கு செல்லவில்லையா?" என்று அவனது அருகில் சென்றாள். பாரதியிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. தாய் அவனை தொட்டு தடவியபடி, பாரதி என்று அழைத்தாள். அப்போது பாரதி அழுது கொண்டிருந்தான். தாய் திடுக்கிட்டு ஏன் செல்லம்! என்ன நடந்தது உனக்கு! என்று பதற்றத்துடன் வினவினாள்.

அப்போது பாரதி, அம்மா ஆசிரியர் புதிய நோட்டு புத்தகம் வாங்க கூறினாள். அதனை நான் வாங்கவில்லை. அவர் என்னை தண்டித்து விட்டார். நோட்டு புத்தகம் இல்லாமல் பாடசாலைக்கு வரவேண்டாம் என்று கூறி விட்டார் என்று கண்ணீர் மல்க கூறினான். செல்லம்மாவின் கண்களிலும் நீர் ததும்பியது. பாரதியின் கைகளை பிடித்து பார்த்தாள்.

அந்த பிஞ்சு கரங்களில் தழும்புகள் தென்பட்டன. "என் கண்ணே" என்று பாரதியை அணைத்துக் கொண்டாள். நீ என்னிடம் கூறியிருக்கலாமே! என்று கூற அதற்கு பாரதி, "நீங்கள் கவலைப்படுவீர்கள் என்பதால் நான் கூறவில்லை அம்மா" என்று கூறினான். பாரதிக்கு தற்பொழுது 10 ஆகியது. பாரதியின் தந்தை ஒரு விபத்தில் உயிரிழந்து விட்டார். அதற்கு பிறகு செல்லம்மாவும் பாரதியும் தனியே வாழ்ந்தார்கள். அவர்களை வறுமை வாட்டியது.

செல்லம்மா கூலித் தொழிலாளி. ஒரு சிறிய தொகை ஊதியமே அவர்கள் வருமானமாக இருந்தது. பாரதி நன்றாக கல்வியில் சிறந்து விளங்கினான். பல திறமைகளையும் கொண்டிருந்தான். செல்லம்மா பாரதி ஒரு சிறந்த வைத்தியராக வேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்து வந்தாள். சில காலமாக செல்லம்மாவிற்கு உடல் நலம் கெட்டு போனது. அதனால் அவள் கூலி வேலைக்கு செல்லவில்லை. வீட்டில் வறுமை குடி கொண்டது. அதனால் தான் பாரதிக்கு நோட்டு புத்தகம் கூட வாங்கி கொடுக்க செல்லம்மாவால் முடியவில்லை.

மறுநாள், செல்லம்மா பாரதியை அழைத்துக் கொண்டு பாடசாலைக்கு சென்றாள். தலைமை ஆசிரியரை சந்தித்து, இன்னும் ஒரு வாரத்தில் நோட்டு புத்தகம் வாங்கி கொடுத்து விடுவதாகவும் அதுவரையிலேனும் பாரதி வகுப்பிற்கு செல்ல அனுமதி கேட்டு மன்றாடினாள். ஒருவாறு தலைமை ஆசிரியர் அதற்கு ஒப்புக் கொண்டார். செல்லம்மாவால் கூலி வேலைக்கு செல்ல முடியாமல் போனது.

ஆகவே, அவள் வீட்டிலேயே இடியப்பம், அப்பம் போன்றவற்றை செய்து விற்கும் நிலைக்கு வந்தாள். அதில் வருமானமும் போதவில்லை. அது மட்டுமல்லாது, செல்லம்மாவிற்கு உடல் நலம் மேலும் சீர் கெட்டது. அவள் படுத்த படுக்கையானாள். பின் புத்திசாலி பையனான பாரதி, தானே வீட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம், இடியப்பம் என்பவற்றை செய்தும் தாயை கவனித்து கொண்டும் தன் கல்வியையும் கவனித்துக் கொண்டான். காலையில் பாடசாலைக்கு செல்லும் முன் உணவுப் பொருட்களை கடையில் கொடுத்து விட்டு தான் செல்வான்.

பாடசாலை விட்டு வந்ததும் அதற்கான பணத்தை பெற்று நோட்டு புத்தகங்கள் வாங்கி நன்றாக கல்வி கற்றான். அத்துடன் செல்லம்மாவையும் கவனித்து கொண்டான். வீட்டில் மின்சார வசதி இல்லை. அதனால் இரவு நேரங்களில் தெரு விளக்கொளிகளிலே பாரதி படித்து வந்தான். எந்த ஒரு கஸ்டமான நிலையிலும் தன் கல்வியை கை விடாமல் தொடர்ந்தான். தன் தாயின் கனவை நனவாக்க கடுமையாக உழைத்தான்.

கா.பொ.த (சா.த) பரீட்சைக்கு தயாரானான். அந்த சமயத்தில் செல்லம்மாவின் உயிர் பிரிந்தது. பாரதி தாயின் பிரிவால் பெரிதும் வேதனைப்பட்டான். மனதை திடப்படுத்திக்கொண்டு பரீட்சை எழுதினான். சிறந்த பெறுபேற்றையும் பெற்றான். அதனை தொடர்ந்து உயர்தர பரீட்சைக்கு தயாராகினான். உயர்தர பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றை பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானான். பின் வைத்திய பட்டபடிப்பை முடித்து மருத்துவனானான்.

இவ்வாறு வறுமையான குடும்பத்தில் பிறந்து பல கஸ்டங்களை எதிர்கொண்டு தன் இலட்சியத்தை பூர்த்தி செய்த பாரதியின் வாழ்க்கை வரலாற்றுக்கதையை ஒருவாறு கிருஷ்ணன் அனைவரது முன்னிலையிலும் வாசித்து முடித்தான். எல்லோர் கண்களிலும் நீர் ததும்பியது. பணம், நகை இவை ஒன்றும் செல்வம் அல்ல. எல்லாவற்றிலும் மேலான கல்வியே பெரும் செல்வம் என்று உணர்ந்து கொண்டனர். நாமும் பாரதியை போல அனைத்தையும் வெற்றி கொண்டு கல்வி செல்வத்தை அடைவோம் என உறுதி எடுத்து கொண்டனர்.

## சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகள்

**“கீழ்ப்படியக் கற்றுக்கொள்.
கட்டளையிடும் பதவி தானாக
உன்னை வந்து அடையும்.”**

**உங்கள் உடம்புக்கு
மரணம் உண்டு....
ஆனால்
உங்களுக்கு ஒருபோதும்
மரணம் இல்லை.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையாளியின் ஓரத்தில் நின்று .....

"கொட்டிய ஆரன்" சு.சிவசங்கரன்
ஆசிரியர்

நாளை புன்னகைக்கிறது...
நீங்கள்
நர்த்தனங்கள் ஆட
மேடைபோட்டுக் காத்திருக்கிறது...!

கல்லூரிக்காலம்!
இந்த
இளமையின் கருவறை
ஒருமுறை மட்டுந்தான்...

கடிகாரம்
இடஞ்சுளி கொண்ட
பொழுதுகள் இங்கே...
கானல் நீரான
கணங்களும் இங்கே...

பொடியான பொழுதுகள்
போரானதும் இங்கே...
போரான பொழுதுகள்
பொடியானதும் இங்கே...

சிறகுகட்டிப்
பறந்ததும் இங்கே...
சிலுவை கொண்டு
சுமந்ததும் இங்கே...

அறியாத இன்னல்களும்
அறிந்த பின்னல்களும்
அரியாசனம் கொண்டதும்
இங்கேதான் ...
நீ
முள்ளேறி மிதிக்க
பாதுகை கட்டியதும்
இங்கேதான்...
ஓர் அறையில் இருந்துகொண்டு
உலகைச் சுற்றியதும்
இங்குதான்...

நரம்பு நாண்களில்
இனிமைக்கொடி ஏற்றி
வரம்பு மீறி.அரும்பு முளைத்ததும்
அரும்பு மீறி வரம்பு கட்டியதும்
இங்கேதான்...

தோள்களில் சிறகுகள்
தொங்கவில்லையாயினும்...
மனசு றெக்கை கட்டியதும்
இங்கேதான்!

நீ சுமந்த கல்லூரி நாட்களும்
உனைச்சுமந்த கல்லூரி மண்ணும்
பாகப்பிரிவினை கொள்கையில்...

உன்
எதிரொலி குடித்த
வகுப்பறைச் சுவர்கள்
தனிமையில் புலம்பும்...
நீ கிறுக்கிய
மேசையின் கால்கள்
உனைக்காண அடியெடுக்கும்...
ஒடிற்ரோறிய சரஸ்வதியின் கண்களும்
உனைத்தேடி ஏங்கிக் கொள்ளும்...

தோழமையின்...
சேட்டையும் அரட்டையும்
சேர்த்து வை
அவை உன்
நினைவுப் பெட்டகத்தின்
சாவிக்கொத்துகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருவங்கள் சுருக்கி
உருவங்கள் தேடும் – இந்தப்
புகைப்படத்தை
இருதயச் சுவரில் மாட்டிவை!

மாணவக் காற்றே!
நீ பொழிந்ததில்
கல்லூரி செழித்தது ...
உன் தென்றலில்
உளம் குளிர்ந்தது ...

வரவே கூடாதென
வரங்கேட்ட நாட்களும்
வந்தாகி விட்டதே!

அகவைகள் பதின்மூன்று
அடைகாத்திருந்து – இன்று
விடைதுரத்தி நிற்கிறாள் – உன்
கல்லூரித் தாய்!

அதோபார்...
உன் வரவுக்காய்..
காலப்பெருவெளியின் வீதியெங்கும்
அலங்கரிக்கப்பட்டுள்ளது...
வாசலெங்கும்
வரவேற்புகள் பூத்துக் குலுங்குகின்றன...
பன்னீர் தெளிக்கின்றன பரவசமாய்...
நீ
கிளைகளுக்காய் ஏங்கினாய்
அங்கு உனக்காக
மரமே வரங்கேட்டு நிற்கிறது!

உதிரும் ஞாபக இறகுகளை
மயிற் பீலியாய்
பத்திரப்படுத்திக்கொள்...
வாழ்வின் சுகமான
கவரி வீசும்...

என்றேனும் ஒருக்கால் – உன்
நெஞ்சைப் பிளந்து நினைவுப் புதை
விழித்திரை நனைந்து
ஓவியம் வரையும்...
வெள்ளைச் சீருடை
கொள்ளை அழகாகும்...
ஆசிரியப் பூக்களின் வாசம்
அப்போதுதான் வீசும்...

இலையுதிர்க் காலத்தில்
பூக்கள் பூபாளம் பாடுவதில்லை...
ஓர் ஆசானாய்...
கட்டை விரல் கொண்டு
கண்ணீர் விலக்கி
விடை கொடுக்கிறேன்...

கல்வி ஒழுக்கம் தூய்மை
மகுடப் பாசறையில்
ஜனித்த புரவிகளே!

நாளைய
தேசரதத்தை இழுக்க
கடிவாளம் பூட்டி விட்டிருக்கிறாள்.
கல்லூரித்தாய்...

வையாளி!
நாளைக்கான
வாசற்படியில் நின்றுகொண்டு
வெற்றிமாலைகளைச் சூட்டுகின்றோம்...
கலைச்சரங்களைச் சாற்றுகின்றோம்...
வாழ்த்துகின்றோம்!

பொய்யா மொழித்தடத்தில்
புழுதி பறக்க விரையும்
புரவிகளின் வையாளியில்...
சின்னதாய் – ஓர்
சிறகசைப்பு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விழுமியங்கள்

திருமதி.சிறிரஞ்சனி நவரத்தினம்
ஆசிரியை



தனிமனிதனுக்கும்,சமூகத்திற்கும் உலகிற்கும் நலன் தரக்கூடியதும் விழுப்பம் தரத்தக்கதுமான மனித நற்பண்புகள் நல்லொழுக்க நன்னடத்தைச்சீலங்கள் நன்மனப்பாங்குகள், குணநலப்பண்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாக விழுமியங்கள் உள்ளன. மனிதன் பண்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கும், நல்ல வண்ணம் பிறர்நலம் பேணுவதற்கும் உறுதுணையாக அமைவதும் விழுமியங்களே. மனிதரில் ஆன்மீக ஒழுக்க, சமூக, பண்பாட்டு வளர்ச்சியை உறுதிப்படுத்தி மனிதனை விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு உயர்த்தி இறுதியில் தெய்வீக நிலையை அடையச்செய்யவும் உதவுபவை விழுமியங்களாகும். இதனால் மனிதவாழ்வில் விழுப்பம், மேன்மை, உயர்வு, உன்தம் தருபவையே விழுமியங்கள் எனவும் கூறப்படுகின்றன.

இந்த வகையில் அனைவருக்கும் பொதுவான பிரதான விழுமியங்களாக விளங்குபவை அன்பு, நீதி, உண்மை, அஹிம்சை, சாந்தி, இரக்கம், ஈகை, ஒப்புரவு, பிறர்நலன்பேணல், பகிர்ந்துண்ணல், சமத்துவம், தூய்மை, நட்பு, இனிமை, எளிமை, செய்நன்றியறிதலும் மறவாமையும், கடமை, கண்ணியம், நன்னடத்தை, பொறுப்பு, நேர்மை என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை வாழ்க்கையில் மேற்கொண்டு வந்தால் ஒரு பொல்லாப்புமின்றி பல்சமூகக்கட்டமைப்பினை கொண்ட எம் நாட்டில் அனைவரும் நல்லவண்ணம் வாழலாம்.

மனிதவிழுமியங்கள் கால தேசவர்த்தமானங்களைக் கடந்து நிலைத்து நிற்பன மனிதவாழ்க்கை விழுமியங்களின் அடிப்படையில் அமையும்போது வாழ்க்கையில் அமைதி, பரஸ்பரம், நல்லுறவு, மகிழ்ச்சி, நிறைவு, உடல்நலம், நீண்டஆயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞானம் ஆகிய அனைத்தும் கிடைக்கும்.

எனவே மனிதவிழுமியங்களுள் தலையாயது அன்பு ஆகும். இதனாலேயே சைவத்தில் அன்பே சிவம் என்பார்கள். அன்பே சிவம் என்பதனூடாக உயிர்களிடத்தில் அன்பாய் இருக்க வேண்டும் என்பதே எடுத்துக்காட்டப்படுகிறது. அன்பு தான் அறத்தின் அடிநிலையாகும்.

அன்புதான் இன்ப ஊற்று அன்பினால் அகிலத்தை வெல்லலாம். கருணை, தயை, இரக்கம், பணிவு, அடக்கம், பிறர்நலம் பேணல், அஹிம்சை அனைத்தும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பின் விரிவாக்கங்களே இதனாலேயே வள்ளுவரும் 'அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு' எனக் கூறினார்.

அஹிம்சை என்பது எவ்வுயிர்க்கும் உறுகன் செய்யாமை ஆகும். மனத்தாலோ, பேச்சாலோ, செயலாலோ உயிர்கள் வருந்தும்படி தீங்கு செய்யாமை அறம். எல்லா உயிர்களுக்கும் உயிர் வாழும் உரிமை உண்டு. அவ் உரிமையினைப் பறித்தல் ஆகாது. இதனால் எல்லா உயிர்கள் மீதும் பேதமில்லாமல் கருணை செய்தலே அருள் எனச் சொல்லப்படுகிறது. இதனாலேயே வள்ளுவப்பெருந்தகை 'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்' எனக் 'கூறினார். மேலும் 'மன்னுயிர் ஓம்பி அருள் வாழ்வார்க்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை' என்றும் உறுதிமொழி பகிர்ந்துள்ளார்.

விழுமியங்கள் யாவும் அறம் தழுவியவை இதனாலேயே திருமூலர் 'அறம் அறியார் அண்ணல் மாதம் அறியும் திறமறியார்' எனக்கூறியதுடன், அன்பேசிவம் என்றும், கூறி சைவவிழுமியங்களுக்கு வித்திட்டார். மேலும் திருவள்ளுவர் 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது எனக் கூறினார்.

மேலும் மனித விழுமியங்களில் அன்புநெறி அறநெறி ஆட்சி, இயற்கையைப்பேணுதல், கல்வி, பொருட் செல்வம், சமத்துவம் போன்ற சிந்தனைகளும் அடங்க வேண்டும் என்பதும் பலரால் உறுதிப்படுத்தப்பட்டி-ருப்பதைக் காணலாம்.

சிறப்பாக திருமந்திரத்திலே மனித விழுமியங்கள் பல நிறைந்துள்ளன. கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் அன்பேசிவம் எனக் கூறும் திருமூலர் மனிதர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் நேசித்தல் என்பது சிவனை நேசித்தலே என்கிறார். இதனை 'அன்பும் சிவமும் இரெண்டன்பர் அறிவிலார்' என்ற பாடல் மூலம் விளக்கும் இவர் சகலரிடமும் அன்பு செலுத்துவதுடன் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் அன்றாட வாழ்வினை எவ்வாறு அமைக்கலாம் என்பதையும்

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

என்ற நியதியிலே ஒவ்வொருவரும் வாழவேண்டும் எனவும் கூறுகிறார்.

இயற்கையைப் பேணுதலின் அவசியத்தையும்
- அமுதூறும் மாமழையும் நீரதனாலே

அமுதூறும் பனைமரம் கமுகு தெங்கு கரும்பொடு வாழை - பார்மிசை தோற்றும் என்னும்படி மரங்கள் கற்பகதரு எனக்கூறி அன்பும், சமாதனமுமே முதலில் மனித மனங்களிலே விதைக்கப்பட வேண்டும். நல்லொழுக்கம் என்றும் நீர் ஊற்றி அதனை வளர்க்க வேண்டும். மனித மனங்கள் வெறும் காடும்,முட்களும் நிறைந்த பற்றைகளாக இருப்பதை மாற்ற வேண்டும். அப்போதுதான் இயற்கையைப் பாதுகாக்கும் பக்குவம் வளரமுடியும் எனக்கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்வி பற்றிய சிந்தனைக் கருவூலத்திலும் ஒழுக்கக்கல்வியும், ஆன்மீகக்கல்வியும் மனிதனை சுயகட்டுப்பாட்டுடன் முறையான வாழ்வு வாழ வழிவகுக்கும் என்றும் வறியவருக்கு உதவாத கல்வி என்று சொல்லலாமா? ஏன்றும் கூறும் விவேகானந்தரின் சுயகட்டுப்பாட்டை போதிக்காத கல்வியை கல்வி என்றே குறிப்பிடமுடியாது என்ற பகவான் சத்தியசாயிபாபாவின் கூற்றும் மனித விழுமியங்களில் அவை அவசியம் என வலியுறுத்தி உள்ளதை அறியமுடிகிறது. பொருட்செல்வமும் அதுசார்ந்த விழுமியங்களும்

"ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின  
பார்த்திருந்துண்மின் பழம் பொருள் போற்றுமின்  
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே"  
என்ற கருத்தும் திருமூலரால் வெளியிடப்பட்டுள்ளது.

சகலரும் சமத்துவம் என்ற கருத்தும் மனித விழுமியங்களில் காணப்படுவதை பலரும் கூறியுள்ளதை திருமூலரால் வெளியிடப்பட்டுள்ளதால் மனித விழுமியங்களின் முக்கியத்துவத்தினை நாம் உணரமுடிகின்றது. மேலும் மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய உயர்ந்த பெறுமானங்களாகிய விழுமுயங்கள் பற்றி இந்துசமய நூல்களும், அறநூல்களும், நீதி நூல்களும் பறைசாற்றி நிற்கின்றன.

இவ்வாறு மனித விழுமியங்களைப் பேணி தகுந்தவற்றைச் செய்து, தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து ஆன்மீக நெறியில் வாழ்பவர்கள் உலகியல் நலன்களை இம்மையிலும், வீடுபேற்றை மறுமையிலும் பெற்றுக்கொள்வதற்கு உரியவராகின்றார்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

**சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகள்**



**சுமைகளை கண்டு நீ துவண்டு விடாதே!**  
**இந்த உலகத்தை சுமக்கும்**  
**பூமியே உன் காலடியில்தான்!...**

**நீங்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள்**  
**என்பதில் நம்பிக்கை வையுங்கள்.**

**ஒரு மனிதனால் செய்யக்கூடிய சாதனையை**  
**இன்னொரு மனிதனாலும் செய்ய முடியும்....**

Digitized by Noolaham Foundation.  
noolaham.org | aavanaham.org

# இனிதாய் ஒரு தருணம்!

ரவிச்சந்திரன் பிறேமினி
2019 வணிகம்

முள்ளுச் செடியின்
இளந்தளிர் நடுவே
மொட்டவிழ்ந்து
இதழ் மலரும் ஒரு ரோஜா!
செந்நிற ரோஜாவிற்கு
பொன் நிறம் சேர்க்கும்
கதிரவனின் கதிர்களின்
கனிவான வருடல்கள்!

இரவு பொழிந்த பனியின்
இதமான குளிர்மை
ஆகா! எத்தனை அழகு
அவ் ரோஜாவில்...

தன் கவர்ச்சி அழகினாலும்
கவர்ந்திழுக்கும் நறுமணத்தாலும்
இரைச்சலுடன் உலாவரும்
வண்டுகளை வசியம் செய்யும்
வல்லமை கொண்ட - ரோஜாவிற்கு
தன் இதழ் பதிந்து வண்டுகள்
தேன் நுகரும் தருணம் இனிது!

தன் உதிரத்தை உயிராக்கி
தன்னுள்ளே தன் சிசுவை
பத்துமாதம் சுமந்து தன்
எண்ணமெனும் கருந்திரையில்
குழந்தை முகத்தை சித்தரித்து
அழகுபார்க்கும் ஒரு தாய்க்கு
ஈரைந்து மாதம் கடந்து
குழந்தை மண்ணில் பிறந்து - தன்
முலைப்பாலை தாவிக்குடிக்கும்
அவ் இளநிலவை
தன் கரம் கொண்டு தடவும்
தருணம் இனிது.

ஐந்து வயதிலேயே
குடும்பத்தை விட்டு
பிரிவுத் துயர் சுமந்து
பாடசாலைக்கு வந்து
அனுங்கலுடனும் சினுங்கலுடனும்
முதலாம் தரத்தில் அமர்ந்து
அறிவூட்டும் நல் ஆசான்
அன்பிற்கு நண்பர்களென
பாடசாலையை குடும்பமாக்கி
பதின்மூன்று வருடங்கள் வாழ்ந்து
பண்பும் ஒழுக்கமும்
கற்றுத் தேர்ந்து ...

உயர் தரம் எனும் போர்வையில்
சிறுகுழந்தைகளாகவே
இரு வருடங்கள் பயின்று
இன்று பரீட்சை அறையில்
வினாத்தாளிற்காக
இன்னும் சில நொடிகளே
எனும் நிலையில் காத்திருக்கும் - எம்
சகோதரர்களிற்கு
அத் தருணம் இனிதே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ நீயாக இரு ...

இ.ப்ரியங்கா
2019 வணிகம்

ஒளி பிடித்து
மின்னும் பொன்னும்
மினுங்கும் மணியும்
உயர்ந்ததே - எனினும்
அண்டவெளி பிடித்து
காலத்தைக் கடக்கும்
றொக்கெட்டின்...
இறக்கை காட்டும் தகரம்
உயர்ந்ததே!
நீ நீயாக இரு!

பாவம் புழுதி
கழுவிச் செல்லும்
புனிதநீர் கங்கை - எனினும்
தாகம் தணிக்கத்
தண்ணீர் ...
கிணற்று நீர் அஃதே!
நீ நீயாக இரு!

நீலத்திற்கு ஜரிகை கட்டும்
கோலமயில் அழகே!
கொஞ்சும் நடனமும்
கொண்டையும் அழகே!
ஆனாலும் படைத்து வைக்கும்
விருந்தும் விரதமும்
காக்கைக்கே - எனில்
நீ நீயாகவிரு!

பாராளும் பட்டை
ஆர் வெறுப்பர் ஆனாலும்,
தேக சுகம் தர
தேடிப் பார்ப்பதோ பருத்தி ...
நீ நீயாக இரு!

உன்னைப் படிக்கும் ...
உன்னைப் போற்றும் ...
உனக்காய் ஆகும் ...
உலகம் ஓர் நாள்!
நீ நீயாக இரு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி என்பது

க.டிலுக்க்ஷினி
2019 கலை

"கல்வி என்பது உடல்,உள்ளம் ஆன்மப் பண்புகளை வளர்ப்பதாயும், வெளிக்கொணர்வதாயும் இருத்தல் வேண்டும். "வாழ்க்கைக்காக கல்வி, வாழ்க்கை மூலம் கல்வி, வாழ்க்கை முழுவதும் கல்வி என்று அமைய வேண்டும" என்பர். அண்ணல் காந்தி அடிகள் கல்வி என்பது "உடலுக்கும் உள்ளத்திற்கும் அமைதியை அளிக்க வல்லதாக இருக்க வேண்டும" என்பர் ரூசோ. " கல்வி என்பது கோல்" என்றார் தாமஸ் ஜெ.்.பர்சன்.

"மன்னனுக்குத் தன் மண்ணிலே மதிப்பு,மரியாதை. ஆனால் கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு,சீர்மை. மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ? உன்னை அறிந்தா தமிழ் கற்றேன் என்று கம்பர் சோழ மன்னனுக்கு அறை கூவல் விடவில்லையா?

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்" என்றும்

"மூத்தோன் வருக என்னாது அவருள் அறிவுடையன் ஆறு
அரசுஞ் செல்லும்"
என்றும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கற்றாரை ஏற்றவில்லையா?

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்று கல்வியின் இன்றியமையாதவை அதிவீரராம பாண்டியன் அறியவில்லையா?
"துள்ளிக்குதிக்கும் பருவத்தே என்துடுப் படக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே"

என்று பட்டினத்தடிகள் கல்வி கற்பிக்காத தன் தந்தையை நோக்கிப் புலம்பவில்லையா? இவையெல்லாம் கல்வியின் சிறப்பை உலகிற்கு உணர்த்தும் கலங்கரை விளக்கங்கள்.

கல்விச் செல்வம் நிலையானது, காலத்தை கடந்து வாழ்வது, அறிவைத்தருவது, ஆற்றலைப் பெருக்குவது, மனிதனை மனிதனாக்குவது. இவ் உலகில் எத்தனையோ பேரரசுகள் தோன்றின. எத்தனையோ பெரு மன்னர்கள் ஆண்டனர். இன்று அவர்கள் எங்கே? அவர்கள் ஆண்ட அரியணைகள் எங்கே? அவை அனைத்தும் கால தேவன் தன் பசிக்கு உணவாக்கிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்று கல்வியில் வல்ல கம்பர் வாழ்கிறார். காளிதாசர் இருக்கிறார். வள்ளுவரின் திருக்குறள் வாழ்கிறது. கவிபேரரசின் ஹோமர் காவியம் கவினுறக் காட்சியளிக்கின்றது. சேக்ஸ்பியரின் செழுமை மிகு நாடகங்கள் உலவுகின்றன. இவை எல்லாம் காலம் காலமாக மக்களினம் உள்ளவரை இவ் உலகில் வாழும் பேறு பெற்றவை. போற்றி புகழும் திறம் வாய்ந்தவை. எனவே கல்வி உலகில் உள்ள செல்வங்கள் அனைத்திலும் தலை சிறந்தது உயர்வானது. அக் கல்வியின் உயர்வு பற்றி நாம் தெளிவோம்.

கல்வி ஒரு செல்வம், அது செல்வத்துள் செல்வம்,
செல்வத்துள் எல்லாம் சிறந்தது கல்வி செல்வம்,
நிறைவானது முழுமையானது.

# Good bye Friends...

*R. Vitharsan*
*2019 Commerce*

**There is a secret**
**that only real frienda know,**
**And it is this.**
**All the mountains and valleys**
**in the world**
**Cannot separate friends**
**whose hearts are**
**as one!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நாம் தமிழ்மொழி பேசுவோம்!!

**(இணையத்திலிருந்து)**

உயர்தனிச் செம்மொழியாம் எம்மொழி தமிழ் மொழியின் சிறப்பு உச்சரிப்பு ஆகும். எம் இனிய மொழியில் மேலும் சிறப்பு சேர்ப்பது "ழ"கரம் ஆகும். ஆனால் எம் தமிழர்களில் பெரும்பாலானோர் அதை சரியான முறையில் உச்சரிப்பதில்லை. "ழ"கரத்தின் சிறப்பை உணர்ந்து கொள்ளுங்கள். சரியான உச்சரிப்பில் நம் தாய் மொழியை பேசுங்கள்.

நமது மொழியின் மெய் எழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளது என்பது நாம் யாவரும் அறிந்ததே. க, ச, ட, த, ப, ற என்பனவற்றை வல்லின ஒலிகளாகவும் ங, ஞ, ண, ந, ம, ன ஆகியவற்றை மெல்லின ஒலிகளாகவும், ய, ர, ல, வ, ழ, ள என்பனவற்றை இடையின ஒலிகளாகவும் வகுக்கப்பட்டுள்ளது.

நம் மொழியில் உள்ள மூவினமான வல்லினம், மெல்லினம், இடையினம் மூன்றும் "தமிழ்" என்பதிலேயே ஒருங்கே இணைந்துள்ளது மேலும் சிறப்பு.

**த – வல்லினம்**

**மி – மெல்லினம்**

**ழ் – இடையினம்**


மேற்பல் வரிசையின் முன்பகுதி உட்புறத்தை (அண்ணம்) நாக்கின் நுனி கொண்டு தொட்டால் (ஒற்றுதல்) தோன்றுவது ஒற்றல் "ல" கரம்.

நாக்கின் நுனியை உள்ளே வளைத்து அண்ணத்தை (மேற்பல் வரிசை உட்புறம்) வருடினால் தோன்றுவது வருடல் "ள" கரம்.

இரு நிலைக்கும் இடையில் நாக்கின் நுனி வளைந்து நின்று தோன்றும் ஒலி "ழ"கரம். இது சிறப்பு ழகரம் என்று சுட்டப்படும்.

இம்மூன்று ஒலிகளையும் வேறுபடுத்திச் சரியாக ஒலித்தால் பொருள் வேறுபடுதலை அறியலாம். இது போல் ஒலி வேறுபாட்டை அறிந்து கொள்ளுங்கள். நம் குழந்தைகளுக்கும் சரியான உச்சரிப்பை பழக்கி கொடுங்கள். நம் தாய் மொழியை சரியான முறையில் பிழை இன்றி பேசுவதும், எழுதுவதும் தான் நமக்கு சிறப்பு என்பதை உணர்ந்து கொள்வோம்.

**சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன் உடல்**
**சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்!**
**பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்**
**பைந்தமிழில் அழுகையொலி கேட்கவேண்டும்!**
**ஓடையிலே என்சாம்பல் ஓடும்போதும்**
**ஒண்தமிழே! நீ சலசலத்து ஓடவேண்டும்!**



**வாழ்க தமிழ்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதம் நிறைந்த ஆசிரியம்

திரு.அ.ரவீந்திரன்
ஆசிரியர்

"இன்று உலகம் அனைத்துத் துறைகளிலும் விரைவான மாற்றத்துக்கு உட்பட்டு வருகின்றது. சிந்தனை விருத்தியும் அதனூடான விஞ்ஞான சாதனங்களின் விருத்தி என்பவை அறிவுப்பிரவாகம் கொண்ட உலகியல் மாற்றங்களுக்கான அடிப்படை உலகமயமாக்கல் ஆகும்.

ஏனைய துறைகளைப் போன்றே கல்வித்துறையிலும் பலபரிமானங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய சூழலில் மிகச்சிக்கல் நிறைந்த அதே வேளை பொறுப்பு மிக்க மேன்மையானதொரு பணியாக ஆசிரியர் சேவை காணப்படுகிறது.

ஆசிரியர் பணியால் மட்டும் ஒரு மனிதனை முழுவாழ் நாளிலும் நல்ல பிரஜையாக அல்லது நடைப்பிணமாக உருவாக்கலாம். எழுத்தறிவித்தவன் இறைவன் என்ற முன்னோரின் கூற்றுக்கேற்ப ஆசிரிய சேவையானது மிகப் புனிதமானதாக நோக்கப்படுகின்றது. இன்னும் சமூகத்தில் ஆசிரியர் மீதான எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதன் ஒரு விளைவுதான் இன்றைய ஆசிரியர் தினம்.

**ஒரு மனிதனால் மட்டுமே இன்னுமொரு மனிதன் உருவாக்கலாம் என்பதற்கேற்ப மனித நேயம் மிக்க நற்பிரஜைகளைத் தயார் செய்வதில் ஆசிரியர்கட்கு நிகராக எவருமில்லை.**

மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவதற்கு உதவுபவரே ஆசிரியர்கள் ஆவர். இப் பணியானது உலகிற்கு புதியதொன்றல்ல. பண்டைய காலத்தில் சமயத் தலைவர்களாலேயே கல்வியறிவு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. அன்று ஆன்மீகமே கல்விப்போதனையின் அடிப்படையாக வந்தது. புராதன பைஸாந்தியம் இந்தியா, சீனா, எகிப்து போன்ற பிரதேசங்களில் கல்வி, மத போதகர்களாலேயே வழங்கப்பட்டதுடன் இவர்கள் சமூதாய வழிகாட்டியாகவும் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

மத்திய காலப்பகுதியிலும் சமய நிறுவனங்களினூடாகவே அறிவுப்போதகைகள் பரவப்பட்டன. இந் நிறுவனங்கள் காலப்போக்கில் பல்கலைக்கழகங்களாக வளர்ச்சியடைந்தன. காலவோட்டத்தில் அறிவார்ந்த சமுதாயங்களின் தோற்றம் தொழில் நுட்ப வளர்ச்சி போன்றன கல்விப் போதனையில் ஈடுபட்ட ஆசிரியர்களின் கடமைகளை விரிவாக்கம் செய்தன. எமது நாட்டிலும் கூட ஆரம்பகாலங்களில் சமயம் சார்ந்தோர்களாலேயே கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இன்று 90 வீதத்திற்கும் அதிகமானளவு எழுத்தறிவு கொண்ட வளர்முக நாடான இலங்கையில் சுமார் 44 லட்சம் மாணவர்களுக்கு ஏறத்தாழ 02 இலட்சம் ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். இது மொத்த அரச தொழிற்படையில் 16 சதவீதமாகும் இவர்கள் பட்டதாரிகள் பட்டப்பின் பட்டதாரிகள். பயிலுநர்கள் பயிற்றப்பட்ட மற்றும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பயிற்றப்படாத ஆசிரியர் என முறைசார் அமைப்பில் தரப்படுத்தப்படுகின்றன. மொத்த ஆசிரியர் சேவையில் சுமார் 55 சதவீதமானோர் பெண்களாவர். ஆசிரியர் தொழிலானது அரசதுறை சார்ந்திருத்தல், தொழில் பாதுகாப்பு, ஓய்வூதியம், விடுமுறை போன்ற விடயங்கள் இத் தொழில் தெரிவுத் தீர்மானத்தில் முக்கிய இடம் பெறுகின்றன.

எமது நாட்டின் கல்வித்திட்டம், கலைத்திட்டம், பாடத்திட்டங்கள், பாடநூல்கள், ஆசிரியர் கைந்நூல் கற்பித்தல் துணைச்சாதனங்கள் என அனைத்தும் ஆசிரியர்களுக்குப் புறம்பான ஒரு சூழலிலிருந்தே வடிவமைக்கப்படுகின்றன. என்றாலும் அவற்றை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் சிறந்த கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கி மாணவர்களின் கல்வியில் நேரடியாகவும் உடனடியாகவும் தாக்கத்தினை ஏற்படுத்துவோமாக ஆசிரியர்கள் உள்ளனர்.

மாணவர்களுக்கு முன்மாதிரியான தலைவர்களாயிருந்து சமூகத்திற்கு வழிகாட்டும் அச்சாணியாகத் திகழ்கின்றனர்.

ஆசிரிய பணியில் ஈடுபடும் ஒருவர் தொழில்களை விடவும் அதிக வகிபாகத்தினை அல்லது நடிபங்கு கொண்டோராக உள்ளனர். பாடசாலைக்கு வெளியிலும் கூட இவர்களது வகிபாங்கு காத்திரமானது.

நாட்டின் அமுலிலுள்ள கலைத் திட்டத்தின் படி ஆசிரியர் மையக்கல்வி காலாவதியாகி விட்டது. மாணவர்களை மையப்படுத்திய Transformation Role எனும் நிலைமாற்று வகிபங்கை ஆசிரியர் வகிக்கின்றனர். தேவையான இடங்களில் மட்டுமே தலையீடு செய்கின்றனர். இங்கு கற்றல் மட்டுமே முக்கியமானது.

அதாவது மாணவர்கள் தாமாக கற்பதற்கும், கற்றலுக்கு கற்பதற்கும் (Learn to Learn) என்ற சூழலை உருவாக்குகின்றனர். இங்கு Jug Mug Role எனும் ஆசிரியரை நிறைகுடமாகவும் மாணவர்களை வெற்றுக்கோப்பையாகவும் கருதிக் கற்பிக்கும் முறையோ அல்லது Chalk and Method எனும் அனைத்தும் அறிந்தவர் ஆசிரியர் என்ற நடிபாங்கோ பின்பற்றப்படுவதில்லை.

மாறாக ஆசிரியர் ஒரு தலைவராக, உதவுபவராக, பயிற்றுவிப்பாளராக, மேற்பார்வையாளர்களாக, வளவாளர்களாக என சுமார் 60 க்கும் மேற்பட்ட நடிபாங்கை கொண்டவராக இயங்குகின்றார்.

வீட்டுச் சூழலிருந்து பாடசாலைக்கு அடியெடுத்து வைக்கும் பிஞ்சுக் குழந்தைகளின் இளகிய உள்ளத்தில் அறிவையும் விழுமியங்களையும் பதியச் செய்யும் வரலாற்றுக் கதாநாயகர்களாக ஆசிரியர்கள் உள்ளனர். மாணவர்களது விருப்பு வெறுப்புக்களை உணர்ந்து ஒவ்வொருவரும் ஆற்றலுக்கு ஏற்பவும் வளர்ச்சிக்கு ஏற்பவும் சமூகத் தேவைகளுக்கு ஏற்பவும் வழிநடத்தி அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை அளித்து வினைத்திறன் மிக்கோராய் சமூகத்திற்கு வெளியேற்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர்களுக்கு முன்மாதிரியான தலைவர்களாயிருந்து சமூகத்திற்கு வழிகாட்டும் அச்சாணியாகத் திகழ்பவர்கள் ஆசிரியர்களே!!!**

பலர் நினைப்பது போன்று ஆசிரியர் தொழில் என்பது எளிய செயலன்று. உடல் களைப்பு மட்டுமன்றி உள்ளக்களைப்பையும் தோற்றுவிப்பதாய் உள்ளது, இன்னும் ஏனைய தொழில்களைப் போன்று ஓரளவு எளிதில் பெயரும் புகழும் பெற்றுவிடவும் முடியாது.

சமுதாயத்தில் மற்றெல்லாத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளோரை விடவும் ஒரு ஆசிரியரது தனிப்பட்ட சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவரது நடத்தைக் கோலங்கள் மீது மாணவர் மாணவர்கள் அக்கறை செலுத்துகின்றனர். மாணவர்கள் தொடர்பு கொள்ளுவோரில் தமது மனதை கவர்ந்தோராக கொள்வது ஆசிரியர்களை மட்டுமே. ஏனெனில் ஆசிரியர்கள் மாணவர்களது பல்வேறு பிரச்சினைகளையும் புரிந்து கொண்டு அவற்றை தீர்த்து வைப்போராகவும் ஆலோசனை வழங்கி நெறிப்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர்.

இன்றைய உலகில் ஆசிரியர்களை நாட்டின் அபிவிருத்திக்கான முதலீடாக கணிக்கப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தியில் மனிதவள அணுகுமுறையானது ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது. இன்னும் உலகலாவிய ரீதியில் ஆசிரியர் தொழில் உயர் அந்தஸ்து உடையதாக கணிக்கப்படுகின்றது.

வருங்கால பிரஜைகளை உருவாக்கும் உன்னதமான பணியில் ஆணிவேராக விளங்கும் ஆசிரியர்களின் நம்பிக்கை, அர்ப்பணிப்பு, அதீத ஈடுபாடு மற்றும் வினைத்திறனுடனும் இளந்தலைமுறையினருக்கு வழிகாட்டுகின்றன.

ஒரு மனிதனால் மட்டுமே இன்னுமொரு மனிதன் உருவாக்கலாம் என்பதற்கேற்ப மனித நேயம் மிக்க நற்பிரஜைகளைத் தயார் செய்வதில் ஆசிரியர்கட்கு நிகராக எவருமில்லை.

எமது நாட்டிலுள்ள சுமார் 80 சதவிகிதமான ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் உழைப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எமது ஆசிரயர்களுக்கான ஊதியம் உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது திருப்திகரமான நிலையில் இல்லை என்ற கசப்பான உண்மையினை இவ்விடத்தில் கூறவேண்டும்.

முடிவாக பாடசாலையை விட்டு சமூகத்திற்கு மாணவர்களை வெளியீடு செய்யும் போது தேர்ச்சியுடையவராக வேலை உலகிற்குப் பொருந்தக் கூடியோராக சமநிலை ஆளுமை கொண்டோராக பாடசாலையில் வழங்கப்பட்ட அனுபவங்களை பிரயோகிக்க கூடியோராக உருவாக்குவதில் ஆசிரியர் பணி எந்த ஒன்றுடனும் ஒப்பீடு செய்ய முடியாது. ஒரு தினத்தில் மாத்திரமன்றி வாழ்நாள் முழுவதும் ஆசிரியர்கள் பெருமைப்படுத்தப்பட வேண்டியவர்களே....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்



ஆசிரியை நளாயினியின் பிரியாவிடை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமை தந்தையே!

செல்வன்.S.கோபிஷாந்
2019 வர்த்தகம்

எனதருமை தந்தையே உமக்கு
இவ்வுலகில் ஈடு இணை இல்லை
ஓவ்வொரு நொடியும் எங்களுக்காய்
உழைத்து

இரத்த துளியாய் வியர்வையாய்
சிந்தி
பள்ளி பருவத்தில் தோள்களிலே
சுமந்தீர்
கட்டிளம் பருவத்திலும் கைவிரல்
பற்றி நடந்து போக பாதை
காட்டிய அன்பை என்னென்பேன்! ஏதென்பேன்!

பாசத்தின் வரைவிலக்கணமாய்
அன்பின் அடைக்களமாய்
உறுதியின் உருவமாய்
தாய்க்கு நிகரான என்னை
வளர்த்த உம் புகழ் கொடியை
பார் நடுவிலே ஏற்றுவேன்
அருமை தந்தையே உம்மோடு
இருக்கும் இடம் கல்லறையாய்
இருந்தாலும் எனக்கு சம்மதமே.

ஒரு நல்ல புத்தகம் நூறு நண்பர்களுக்குச்
சமனாகும்..
ஆனால் ஓர் நல்ல நண்பன்
ஒரு நூலகத்திற்குச் சமனாக இருப்பான்.....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிம்மதியைத் தேடிடுவேன்

கவிதராஜன் கதிஸ்கா
2019 கலை

மஞ்சு மிதக்கும் அந்திப் பொழுதில் எந்தன்
நெஞ்சம் பறிகொடுத்து நிம்மதியை தேடிடுவேன்
கொஞ்சும் தென்னை இளங்கீற்றின் வழியே — கதிர்
நெஞ்சைக்கவரும் ஒளிக்கோலம் வரைந்திருக்கும்.

தென்னை இளங்குறுத்தைத் தழுவித் தழுவி இன்பத்
தேனைச் சொரியும் மலர்மணத்தைச் சுமந்து வந்தென்
மேனி தடவும் தென்றல் காற்றுக் கனிந்து பல
காவியத்தின் சேதி சொல்லிக் காதம் விரைந்து செல்லும்

இன்பம் மலர்ந்திருக்கும் இக் கணத்திலே
தென்னையிளங் குருந்திலந்தப் பசுமைப் பரப்பினிலே
தொங்குமிளங்கிளிகள் செம்பவள வாய்திறந்து
எங்கும் எதிரொலிக்கக் கீச்சொலி எழுப்பும்

பச்சைப் பசுங்கிளியின் இச்சைமிகு ஒலியினில்
கச்சிதமாய் வளர்ந்த கனவுகள் கலைந்து வரும்
அந்தி வெயிலும் கதிர் ஆக்கி வைத்த கோலங்களும்
எந்தன் விழியெதிரில் இருளில் புதைந்திருக்கும்

நிசப்தமான வேளையிலே உயிரற்ற ஜடமாய்
நிம்மதியைத் தேடிடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையின் வரலாறு உருவாகிய காலம்

(கா. செந்தூரன் பழைய மாணவனின் பதிவு)

உலக வரலாறுகள் உருவாக்க காலம் என்பது கிட்டத்தட்ட கிறிஸ்துக்கு பின் வந்த காலப் பகுதிகளை ஒட்டித்தான் காணப்படுகின்றன. அப்படித்தான் இலங்கை வரலாறும். கி.மு 500 ஆண்டளவில் விஜயன் வருகையோடு தொடங்குகிறது என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.

ஆனால் மகாவம்சம் விஜயன் வருகைக்கு முன்னரான திருகோணமலையில் இறுக்கமான ஒரு ஆட்சிமுறை இருந்ததை வெளிப்படையாக சொல்லவிட்டாலும் சில இடங்களில் சொல்லாமலும் இல்லை.

அப்படித்தான் விஜயனது வருகைக்குப் பின்னரான சம்பவம் ஒன்றை கூறும் மகாவம்சம் நம் தேடலை அதிகரித்து சென்று விடுகிறது, விஜயன் வருகைக்கு பின்னர் விஜயனுக்கு வாரிசு இல்லாமல் போகவே விஜயன் தனது வாரிசுக்காக கலிங்க நாட்டில் இருந்து தனது தம்பி சுமிதனின் மகனான பாண்டு வாசுதேவனை இலங்கை தீவில் உள்ள தனது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்துக்கு அழைக்கிறான்.

அப்படி அழைக்கப்பட்ட பாண்டுவாசு தேவனும் அவனுடைய 32 மந்திரிகளும் துறவிகள் வேடம் பூண்டே திருகோணமலை துறை முகத்தை அடைந்ததாக மகாவம்சம் கூறுகிறது.

இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டு நமக்கு ஒரு கேள்வி எழுகிறது. பாண்டுவாசு தேவனும் அவனது மந்திரிகளும் மாறு வேடத்தில் திருகோணமலைக்கு வர காரணம் என்ன?

அப்படியானால் விஜயனது கூட்டத்திற்கு எதிரானவர்களின் கட்டமைப்பு திருகோணமலை பகுதியில் இருந்திருக்க வேண்டும்.அதன் காரணமாகவே இக்குழுவினர் மாறுவேடத்தில் வந்திருக்கின்றனர். இவ் மகாவம்ச குறிப்பில் இருந்து இன்னும் ஒன்று புலப்படுகிறது. இங்கு வாழ்ந்த மக்கள் துறவிகளை மதிக்கத்தக்கவர்களாக வாழ்த்திருகின்றனர். ஆகவேதான் பாண்டு வாசுதேவன் குழுவினர் துறவி வேடத்தை தேர்ந்து எடுத்திருகின்றனர்.

ஒழுங்கான ஆட்சி முறையுடன் இம் மக்கள் வாழ்தார்கள் என்று நிருபிக்க மகாவம்சத்தில் இன்னுமொரு குறிப்பு காணப்படுகிறது. துட்டகைமுனு எல்லாளன் போரை பற்றி குறிப்பிடும் மகாவம்சம் எல்லாளனை துட்டகைமுனு வெல்வதற்கு முன்பு 32 தமிழ் ஆரசுகளை வென்றதாக கூறுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதுமட்டும் அல்லாது அக்காலத்தில் மிகப்பிரபலமாக இருந்த கோகர்ண (திருமலை) துறைமுகப்பகுதியை எந்த ஆரிய வம்சத்தில் இருந்து வந்த ஆட்சியாளனும் ஆண்டதாக குறிப்பிடவில்லை. ஆரிய வம்சத்துக்கு ஆதரவாக எழுதப்பட்ட நூலில் அடிக்கடி கோகர்ணம்(திருமலை) சவாலுக்குரிய பகுதியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்பது அவர்களின் செல்வாக்கு குறைவான இடம் என்பதை மட்டும் காட்டுகிறது .அப்படியானால் அந்த 32 அரசர்களில் யாரோ ஒருவனால் இப்பகுதி ஆளப்பட்டு இருக்கிறது என்பது சந்தேகமில்லாமல் புலப்படுகிறது.

இவ்வாறு சவால்க்குரிய பிரதேசமாக இருந்த கோகர்ணம் வழிபாட்டு ரீதியாகவும் பிரச்னைகள் ஏற்படுகின்றன.

கி.மு 300 ஆண்டு காலப்பகுதியில்தான் இலங்கையில் சைவ மற்றும் பிராமணர்களின் செல்வாக்கு அதிகரிக்க தொடங்கிய காலம் என்லாம்.இதற்கு முக்கிய காரணம் வியாபார தொடர்புகள்தான்.இதே மாதிரித்தான் சமணமும் தேவாதார மற்றும் மகாயான பௌத்தங்கள் நிறுவன ரீதியாக இலங்கை தீவில் காலடி எடுத்து வைக்கின்றன.

. கி மு 3 நூற்றாண்டு காலப்பகுதியில் மகாயான பௌத்தத்துக்கு மாறிய மகாசேனன் கோகர்ணம் (திருகோணமலை), எரகாவில்லை(ஏறாவூர்), மற்றும் இலங்கை தீவின் கிழக்கு பகுதியில் இருந்த பிராமணன் கலந்தனின் ஊர் ஆகிய வற்றில் இருந்த லிங்க கோவில்கள் அழிக்கப்பட்டதாக மாகவம்சம் கூறுகிறது. மகாசெனனால் அழிக்கப்பட்ட மூன்று லிங்க வழிபாட்டு தலங்களும் இருந்த இடங்கள் திருகோணமலையை அண்டிய பிரதேசங்கள்தான் இருந்திருக்கின்றன.

இதில் முக்கியமான விடயம் என்னவேனில் பலமான தென்னிந்திய தொடர்பை திருகோணமலை கொண்டிருந்திருக்கிறது. என் என்றால் இலங்கையில் லிங்க வழிபாடு என்பது ஆதார ரீதியாக இலங்கை ஆதிக்குடிகளிடம் இருக்கவில்லை. கந்த, வேல் ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்ட முருக வழிபாடுதான் இவர்களிடம் இருந்தது. அப்படி காணப்பட்ட திருகோணமலையில் வணிகர்களில் வருகை மூலமே லிங்க வழிபாடு அறிமுகப்படுத்தபட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு திருகோணமலையில் லிங்க வழிபாடு ,மற்றும் மகாயான புத்த மதங்கள் போட்டி போட்டு கொள்ள முருக வழிபாடு அழியாமல் தனித்துவமான வழிபாட்டு முறையாக கி பி எழாம் நூற்றாண்டு வரை சிறப்பாக இருந்ததை சூளவம்சம் சில புனைவுகளுடன் எடுத்துரைக்கிறது.

கி பி எழாம் நூற்றாண்டு காலப்பகுதியில் மானவர்வன் என்ற இளவரசன் கந்தக்கடவுளை நினைத்து வேள்வி செய்ததாகவும் அப்போது கந்த கடவுள் மயில் பறவையில் வந்து காட்சி தந்ததாகவும் பாளி இலக்கியமான சூளவம்சம் கூறுப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமைப்பருவம்

A.மிதுர்ஷன்
2019 தொழிநுட்பம்


பூவின் மொட்டுக்கள் போல மௌனமாய் இல்லாமல்
மலர்ந்த பூவைப் போல சிரிக்கும் பருவம்
கூட்டுப் புழுவாய் அடைந்து கிடக்காமல்
பட்டாம்பூச்சியாய் சிறகடிக்கும் பருவம்
துன்பம் கண்டு துவண்டு போய் விடாமல்
புதிய துடிப்போடு இயங்கும் பருவம்

சோதனைகள் பல கண்டு அச்சமடையாமல்
சாதனைகள் படைக்க துணியும் பருவம்
உலகைச் சுற்ற உதவிக்கரத்துக்காய் ஏங்காது
தனித்தே உலா வரும் பருவம்

சோகம் சுமக்கும் சுமை தாங்கியாய் இல்லாமல்
மகிழ்ச்சி பொங்கும் இனிய பருவம்
புலன் அங்கங்கள் முடங்கிக் கிடக்காமல்
வீரமும் வேகமும் பாயும் பருவம்

அனைத்தையும் வென்று சிகரம் தொடவைக்குமாம்

– இளமைப்பருவம் –




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு கோலங்கள் அன்றும் இன்றும்

செல்வி.தி.டக்சிகா
13 கலை

இறைநிலையின் பொருட்டு இந்த மனித உலகம் மாறுகின்றது. இவனது காலடி பட்ட நாளிலிருந்து மண்ணின் பண்பாட்டின் உன்னத அடையாளங்களும், ஒருவரை ஒருவரோடு சேர்க்கும் உறவுகளும் தினந்தோறும் மாறுகின்றன. அவை தவிர்க்க முடியாத நிகழ்கால மாற்றமாகும். காடு, வீடு, ஊர், நாடிலிருந்து கூடி வாழுகின்ற மனிதனின் பண்பாட்டு கோலங்கள் கிராமங்களிலிருந்து நகரம் வரையும் முகிழ்ந்து கிடக்காது இன்றும் கூட பண்பாட்டு உச்ச நிலையங்களாக கிராமங்களே காணப்படுகின்றன. பண்பாட்டின் கூறுகளையும், அடையாளங்களையும் மனிதன் விலக்கியிருக்கலாம். ஆனால் கிராமங்கள் பண்பாட்டை பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு வாய்ந்த ஆசான்களாக விளங்குகின்றன.

ஒவ்வொரு இனத்திற்கும் தனிப்பண்பாட்டுக் கூறுகள் இருக்கின்றன. அவ்வாறே எம் இனம் வாழுகின்ற இடத்திற்கும் அதன் வரலாற்றில் ஏற்படுகின்ற நிகழ்வுகளிற்கும் ஏற்ப இந்துப்பண்பாட்டுக் கூறுகள் எம் இனத்தில் படிந்து காணப்படுகிறது. அந்த வகையில் தனித்துவமான நல்ல இயல்புகளையும், வாழ்க்கை கோலங்களையும், பண்பாட்டு நுட்பங்களையும், முறைகளையும், நீண்ட கால பாரம்பரியத்தையும் கொண்டமைந்த தமது பண்பாடு பற்றி பேசுமளவிற்கு உன்னத வளர்ச்சியை கொண்டது தமிழ் இனமாகும். அது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே தெய்வத்தன்மை கொண்ட பண்பாடுமாகும். இது அன்றிலிருந்தே புலவர்கள், சான்றோர்களினால் கட்டிக்காக்கப்பட்டது என்றால் அது மிகையில்லை.

அறிவியலின் அகோர வளர்ச்சியும் ஓய்வில்லா உழைப்பும், பண்பாட்டு வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதற்கு மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. பணம், பதவி, பட்டம், புகழ், சமூக அந்தஸ்து போன்றவற்றின் மீதான கட்டுக்கடங்காத மோகம் காரணமாக இல்லறம் என்ற சொல்லே கூறுபட்டுக்கிடக்கின்றது.அறம் என்பது சிறந்த வாழ்க்கை நெறியாகும். இல்லம் கொண்டு பொருள் ஈட்டி, மனநிறைவோடு வாழும் இனிய வாழ்க்கை நெறி இல்லறம் ஆகும். இன்று அது போலி வாழ்க்கையாகி விட்டது. "இருட்டறையில் உள்ளதடா உலகம்" எனும் சொல்லில் எத்தனை பிரிவினைகள் வலுப்பெற்றுள்ளன. சண்டைகள் மலிவாகவும், மரணங்கள் குவிந்தும் காணப்படுகின்றன.

மேலும், விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டின் ஒரு அடையாள அடிப்படைக் கூறாகும். இது பழமை தொட்டு இருந்து வரும் பண்பாட்டுக்கோலமாகும். ஆனால் அது இன்று எந்தளவிற்கு பின்பற்றப்பட்டு வருகின்றது என்பது விந்தையாகும். பெரிய அமைச்சரோடும், பதவியாளருடனும் ஒப்பிடுகையில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எத்தனை பேர் வீதியோரங்களில் பிச்சையெடுக்கின்றனர். அரண்மனை போன்ற பங்களா, இரும்புக்கதவு, அதன் மேல் "நாய் கடிக்கும் கவனம்" எனும் எச்சரிக்கை விருந்தோம்பலுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றது. இதுதான் காலத்தின் வளர்ச்சி. புராதன காலம் எங்கே? அந்தஸ்துள்ளோரின் எழுச்சி, அடிமட்டத்தில் வாழும் தளர்ச்சியும் இவ்வுலகில் இணையாக இருக்கின்றது.

பண்பாடு பற்றி திருக்குறள், புறநானூறு, அகத்திணை என்னும் நூல்களும், ஏனைய நூல்களும் கூறுகின்றன. அந்த வகையில் அறிவு மனையாளளால் அமைதி உலகு காண முடியும் என்று பெண்சக்தியின் பெருமையினை ஆணித்தரமாக வலியுறுத்திய காலத்தினை மனத்தில் கொள்வோம்.

இன்று பெண்ணியம், பெண் உயர்வு சமூகத்தில் எவ்வாறு பார்க்கப்படுகிறது. பெண்ணிற்கான உரிமைகள் எந்தளவிற்கு உள்ளது? பெண் சுதந்திரம் மறுக்கப்படுகிறது. சிறுமிகள் தொடக்கம் மூதாட்டி வரை அச்சமின்றி கல்வி கற்கவோ, தொழிலிற்கு செல்லவோ இயலாத நிலை தற்போது இருக்கின்றது. பொறுப்பு வாய்ந்த துறைகளில் தலைமைப் பொறுப்பு எடுக்கவும், அரசியல் நடத்தவும், உயர் பதவிகளைப் பெறவும், பெண்கள் இன்னும் தயங்குகின்றனர். உலகில் முதலாவது பெண் பிரதமர் திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க என்ற வரலாற்று பெருமை பேசும் வேளையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டிய அவசியம் வலியுறுத்தப்படவேண்டிய துர்ப்பாக்கிய காலமாக இன்று மாறியுள்ளது.

இன்று நாகரிகம் என்ற மாயைக்குள் சிக்குண்டு பெண்கள் தங்கள் கோலமிழந்து குலைந்து கிழிந்து போய்க் கிடப்பதும் இன்னுமொரு நவீன வடிவமாகும். பாரதிதாசன் தீட்டிய பெண்ணோவியங்களை காண்பது அரிதாகிறது. கூட்டுக்குடும்பம் சிதைவடைந்துள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலும் பெண் தனித்தீவாக உருமாற்றம் நிகழ்கின்றது. சமூகச் சீரழிவிற்கு தூபமிடும் சமூக வலைத்தள பாவனைகளின் போது பண்பாட்டு விழுமியங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஒழுக்கம் என்பது தமிழர் பண்பாட்டின் அடிப்படைக் கோட்பாடாகும். அது இன்றும் தமிழர் வாழ்க்கைக்கு அழகையும், மன நிறைவையும் நல்குகின்றது. தமிழ் மக்கள் இத்தனை நூற்றாண்டுகளாய் தனி தத்தமது தேசங்களிலும் நாடுகளிலும் வாழ்ந்து செழித்தோங்குவதற்கும் அரசியல் வாண்மைக்கும் இந்த ஒழுக்கமே காரணமாய் அமைந்திருந்தது. "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஆனால் இன்று உலக ஒழுக்கத்திற்கே ஊறுவிளைவிக்கும் அதி நவீன வளர்ச்சிப்போக்கும் அதனால் உண்டான வாழ்க்கை கோலமும் தமிழர் பண்பாடும் தரம் இழந்து தள்ளாடுகின்றது. தொழிற்துறை, இடம்பெயர்வு, கல்வி, திருமணம், அரசியல் என்று நகர் விட்டு நகர் நாடு விட்டு நாடு தமிழர் பரந்து வாழும் போது தமக்கே உரித்தான பாரம்பரியங்களில் ஒழுகுவதில் நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடிக்கின்றனர்.

"பெஷன்" அல்லது பழக்கம் வழக்கமாகி விட்டது. கணவன் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வகையில் "வையாளி"யின் பயணத்திற்கு பல வழிகளிலும் உதவிய நல்லுள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிப்பூக்களை சொரிந்து நிற்கின்றோம்.

இவ்வண்ணம்
**உயர்தர மாணவர் ஒன்றியம்**
**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறமும் நாற்றமும்
நிற்சரமும் சிந்தி
இந்த
நந்தவனத்தை அலங்கரித்து
றெக்கை கட்டும்
பூக்களுக்காக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org